# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 02 கார்த்திகை 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 28 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048




## கண்ணீரோடு கதறியழுது நேற்று உறவுகள் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

தாயக மீட்பர்களுக்காக ஈகச்சுடர் ஏற்றப்பட்ட கம்பத்தின் முன்பாக அவர்களது பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள், மனம் திறந்து - கதறி அழுத காட்சி அங்கு நின்றோர் எல்லோர் மனங்களையும் உருக்கி கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

தமிழீழ இலட்சியத்தை தமது மூச்சாக வரிந்து கட்டிக்கொண்டு, களமாடி வீரச்சாவை அணைத்துக்கொண்ட மாவீரர் நாள் தாயக மண்ணில் நீண்ட காலத்தின் பின்னர் ஒப்பீட்டளவில் சிறப்பான ஒழுங்கமைப்புடன் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று நடைபெற்றது.

>> 25

## முக்கிய துளிகள்

நீண்ட பல வருடங்களின் பின்னர் வடக்கு -கிழக்கு தமிழர் தாயகத்தில் நேற்று மாவீரர்கள் நாள் எழுச்சியோடு கடைப்பிடிக்கப்பட்டது. துயிலும் இல்லங்களில் நிகழ்ந்தவைகளின் முக்கிய விடயங்களின் சாரம் இதோ!

- மாவீரர் எழுச்சிப் பாடல்கள் துயிலும் இல்லங்களில் நேற்று மாலையிலிருந்தே ஒலிக்க விடப்பட்டிருந்தன.
- தாயக மண்ணில் மாவீரர்களுக்காக 6.02 மணிக்கு ஆலய மணிகள் ஒலிக்கவிடப்பட்டன.
- களமாடிய மாவீரருக்கு ஈகச்சுடர் ஏற்றும்போது, "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே…" பாடல் கடந்த ஆண்டைப் போன்றும் ஒலிக்க விடப்பட்டது.
- மாவீரர்களுக்குப் படையல் படைத்து மக்கள் அஞ்சலி செலுத்தினர்.
- சகல துயிலும் இல்லங்களிலும் மாவீரர் பெற்றோரே முதன்மை ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தினர்.

>> 25

## மாவீரர்களுக்கு நேற்று சபையில் வீரவணக்கம்

### சாந்தி எம்.பி. செலுத்தினார்

கொழும்பு, நவ. 28

"தாயகக் கனவோடு ஆகுதியாகிய எமது மாவீரர்களுக்கு வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்று கார்த்திகை 27. தாயகக் கனவோடு ஆகுதியாகிய எமது மாவீரர்களுக்கு வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாவீரர்களின் துயிலும் இல்லங்கள் இராணுவ முகாம்களாகக் காணப்படுகின்றன. அவ்வாறு இராணுவ முகாம்களாகக் காணப்படும் அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களும் விடுவிக்கப்பட்டு தமது உயிரை ஆகுதியாக்கிய அனைத்து மாவீரர்களுக்கும் நினைவஞ்சலி செலுத்தும் வகையிலான நிலமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்தச் சபை ஊடாக முன்வைக்கின்றேன் என்றார். (உ-5)

### கொழுந்து விட்டெரிந்தன ஈகச்சுடர்கள் அலையெனத் திரண்டனர் மக்கள்

# மாவீரர்களை நெஞ்சிருத்தி நெகிழ்ந்தது தமிழர் தாயகம்

யாழ்ப்பாணம், நவம்பர் 28

தமிழீழ விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களை நினைவுகூர்ந்து தமிழர் தாயக மண்ணிலும், புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் தினம் நேற்றுப் பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழீழ தாயகத்திலுள்ள 16 மாவீரர் துயிலும் இல்லங்களிலும், 5 பொது இடங்களிலும் மாவீரர் நினைவேந்தல்கள் நேற்று நடைபெற்றன.

துயிலும் இல்லங்களில் ஆயிரக்கணக்கில் திரண்ட மாவீரர்களின் உறவுகளும், மக்களும் உணர்ச்சி மேலீட்டால் கதறியழுதனர். துயிலும் இல்லங்கள் சோகமயமாகின. கடந்த ஆண்டைவிட மிகவும் உணர்வுபூர்வமாகவும் எழுச்சியுடனும் மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக்காக வித்தான புனிதர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாள் நேற்றாகும். தமிழீழ விடுத

>> 25



## கடலிலும் நேற்று சுடர் ஏற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 28

ஒன்பது ஆண்டுகளின் பின்னர் மாவீரர்கள் நினைவாக கடலிலும் நேற்று ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கடற்புலிகளால் கடலில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுவது வழமை. போரின் பின்னர் கடந்த ஆண்டு மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டபோதும் கடலினுள் ஈகச்சுடர் ஏற்றப்படவில்லை.

>> 25

## பிறந்தநாள் விவகாரத்தால் வவு. வளாகத்துக்குப் பூட்டு

வவுனியா, நவ.28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் நேற்று மாலை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது என்று வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வளாக விடுதியில் தங்கியிருந்த மாணவர்களால் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டதை அடுத்து முரண்பாடு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த ஒளிப்படங்களை சமூக வலைத்தளங்களில் தரவேற்றிய சிங்கள மாணவர்கள் அச்சுறுத்தும் வகையில் பதிவுகளை இடுகின்றனர் என்று தமிழ் மாணவர்கள் முதல்வரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். தமக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை

>> 25

## சில இடங்களில் குழப்பத்தை ஏற்படுத்த படைகள் முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று நடத்தப்பட்ட நிலையில் ஆங்காங்கே இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நிகழ்வுகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தினர் என்று மக்கள் தெரிவித்தனர்.

கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இராசபாதை வீதியிலிருந்து துயிலும் இல்லத்துக்குச் செல்லும் பாதையில் நேற்றைய தினம் இராணுவத்தினர் பேருந்தைக் குறுக்காக நிறுத்தி வைத்திருந்தனர். நேற்று முன்தினம் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் இராணுவத்தினர் இதுபோன்றே நடந்துகொண்டனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்

>> 25

மாவீரர் நினைவேந்தல் ஒளிப்படத் தொகுப்புகள்
02,03,04,13 ஆம் பக்கங்களில்

see more news in newuthayan.com

## வடக்கில் சாவகச்சேரிக்கு மட்டுமே தேர்தல் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 28

93 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் சாவகச்சேரி நகர சபை மட்டுமே அதில் உள்ளடங்குகின்றது. எனினும் தேர்தலில்

>> 25

# 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேற்று வேட்பு மனு கோரப்பட்டது

### தேர்தல்கள் ஆணைக்குழு அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 28

93 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வேட்பு மனுக் கோருவதற்கான அறிவித்தல் தேர்தல்கள் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 29ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நாட்டில் உள்ள அனைத்துச் சபைகளுக்கும் நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் திட்டமிட்டிருந்தது. தொகுதி எல்லை நிர்ணயம் மற்றும் தொகுதி உறுப்பினர் நியமனம் தொடர்பில் வாக்காளர்கள் சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து, 203 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு, நீதிமன்றச் சர்ச்

>> 25

## உடனடியாகவே 16 இடங்களில் கட்டுப் பணம் செலுத்தப்பட்டது

கொழும்பு, நவ. 28

93 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் கோரும் அறிவிப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட நேற்றைய தினமே 16 இடங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

>> 25

# மாவீரர் தின நினைவேந்தல்






கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம்















கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்









அம்பாறை





சாவகச்சேரி



தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



ஈச்சங்குளம்




இரணைப்பாலை




மட்டக்களப்பு - மாவடி




மன்னார்

# மாவீரர் தின நினைவேந்தல்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


முழங்காவில்


முல்லைத்தீவு



முள்ளிவாய்க்கால்



பாசையூர்


தொண்டமானாறு




சாட்டி




தமிழ் அரசு கட்சியின் யாழ். அலுவலகத்தில்


உடுத்துறை


வவுனியா - குளக்கட்டு


தீருவில்


வவுனியா - புளியங்குளம்


தேராவில்



## டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுநிலையில் குடியிருப்புக்களை வைத்திருந்த 10பேருக்கு தண்டம்

சாவகச்சேரி, நவ. 28
டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கு ஏதுநிலையில் நீரேந்துப் பொருள்கள் காணப்பட்ட 10 குடியிருப்பாளர்களுக்கு தலா 3ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தண்டம் விதிக்கப்பட்டது.
கடந்த மாதம் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் நடத்திய டெங்குப் பரிசோதனையின்போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீரேந்துப் பொருள்கள் காணப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.
இவற்றில் 10 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
விசாரணைகளின்போது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். வழக்கை விசாரித்த நீதிமன்றப் பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## மாவீரர் தினம் கடைப்பிடிக்க பன்னாட்டு அழுத்தமே காரணம்

### வடமாகாண சபை உறுப்பினர் பசுபதிபிள்ளை

கிளிநொச்சி, நவ. 28
மாவீரர் தினத்தை தாயகத்தில் கடைப்பிடிக்கப் பன்னாட்டு அழுத்தங்களே காரணம் என வடக்கு மாகாண சபை உறுப்பினரும் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லப் பணிக் குழுத்தலைவருமான பசுபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். திருநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் வட்டாரப் பணிக்குழுச் செயலாளர் வேலமாலிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாவீரர் தின நிகழ்வு மற்றும் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு சாதாரணமாக நிகழ்ந்தவை அல்ல. நடந்த இனப்படுகொலை மற்றும் இசைப்பிரியா போன்ற போராளிகள் சின்னா பின்னமாக சிதறடிக்கப்பட்ட நிலைமைகள் உலகுக்குக் கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் பன்னாட்டு நிலைமாறு கால நீதிப் பொறிமுறை ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டதனால் அரசு ஒரு தளர்வை ஏற்படுத்தி உள்ளது. ஆனாலும் அச்சுறுத்தல்கள் கண்காணிப்புக்கள் தொடர்கின்றன.
ஆனாலும் கொள்கையில் மாற்றம் இல்லாமல் பயணிக்கின்றோம். இறை நீதியின் அடிப்படையிலும் இயற்கை நீதியின் அடிப்படையிலும் சத்தியமான போராட்டங்கள் தோற்பதில்லை. அந்தக் காலம் மீண்டு வரும்போது மகிழ்ச்சி அடையாவிடினும் ஆறுதல் அடைய முடியும் -என்றார்.
மேலும் வட்டாரப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் வட்டார ரீதியாக மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ.21)

## கலப்பு இன கோழிக்குஞ்சுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.28
அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கொல்லைப்புறக் கோழி வளர்ப்புக்கான கலப்பு இனக் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.
விநியோகம் தொடர்பாக திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:
நல்லினக் கோழிகளுடன் கலப்பு முறையில் உருவாக்கப்பட்டுள்ள கொல்லைப்புறக் கோழி வளர்ப்புக்கான கலப்பினக் கோழிக்குஞ்சுகள் நிற அடிப்படையில் நாட்டுப்புறக் கோழிகளை ஒத்ததாக இருந்த போதிலும் முட்டை இடும் விகித அளவு மற்றும் இயல்புகளில் பண்ணைக் கோழிகளை ஒத்தவை.
அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அருகில் உள்ள அரச கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஒருநாள் கோழிக்குஞ்சுகளும், தடுப்பு மருந்துகள் ஏற்றப்பட்டு வளர்க்கப்பட்ட ஒருமாதக் குஞ்சுகளும் பொதுமக்கள் மற்றும் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.
பிராந்திய கால்நடை மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் பதிவு செய்து தமக்குத் தேவையான எண்ணிக்கை அளவில் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (எ.11)



பிரான்ஸ் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியால் வவுனியா செட்டிகுளம் பகுதியில் போர்ப் பாதிப்புக்குள்ளான குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியாக இரண்டு நல்லின ஆடுகள் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் வழங்கிவைக்கப்பட்டது.

## மதுபோதையில் பேருந்தில் இளைஞர் அட்டகாசம்

பருத்தித்துறை, நவ. 28
பருத்தித்துறை-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டிருந்த இ.போ.ச. பேருந்தில் மதுபோதையில் அட்டகாசம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை அச்சு வேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
மானிப்பாயைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். பேருந்தில் பயணித்தவர்களுடன் குறித்த பயணி அடாவடியில் ஈடுபட்டார் எனக் கிடைத்த முறைப்பாட்டை யடுத்தே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அராலிக் கிளைக் கலந்துரையாடல்

வட்டுக்கோட்டை, நவ. 28
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அராலி மூலக்கிளை சீரமைப்பு மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் பட்டியல் தயாரிப்பு நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் கடந்த சனிக்கிழமை மாலை அராலி தெற்கு வட்டுக்கோட்டையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளையின் தலைவர் பொ.கனகசபாபதி, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். தொடர்ந்து அராலி மூலக்கிளையின் தெரிவு இடம்பெற்றது.
இதில் தலைவராக தர்மலிங்கம் நடனேந்திரன் (கஜன்) செயலாளராக ம.குகறாஜன் பொருளாளராக எஸ்.ஜதிசன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான நிர்வாக செயற்பாடுகள் சீராக இல்லாதமையினால் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான மூலக்கிளைகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உயர் மட்டத்தால் சீரமைக்கப்பட்டு வருகிறது. இதே வேளை வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆறு மூலக்கிளைகள் உள்ள நிலையில் ஏனைய 5 மூலக்கிளைகள் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை கட்சியின் உயர்மட்டக் குழு எடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ.101)

## ஆசிய நாடுகளுக்கான சாரணர் ஜம்பொறியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்



யாழ்ப்பாணம்,நவ.28
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர மாணவன் ஜேசு. ஜெயசீலன் டிலோசன் ஆசிய நாடுகளுக்கான 6ஆவது சாரணர் ஜம்பொறி நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார். பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த 23ஆம் திகதி ஆரம்பித்த இந்த ஜம்பொறி எதிர்வரும் மார்கழி 5ஆம் திகதி வரை இடம்பெறும். இதற்கு இலங்கையில் இருந்து தமிழ் சாரண மாணவர் ஒருவர் மட்டுமே செல்வது குறிப்பிடத்தக்கது. (எ)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் முழுநேர, பகுதி நேரப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத் தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மின்னிணைப்பு, தையல், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுவோர், அறை பராமரிப்பாளர், காய்ச்சி இணைப்பவர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய தேசிய தொழில் தகைமை முழுநேரப் பயிற்சிகளும் ஆங்கிலம், கணினிப் பிரயோகம் ஆகிய பகுதி நேரப் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்க விரும்புவோர் தொழிற் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளுமாறு பயிற்சி நிலைய முகாமையாளர் வே. ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார். பயிற்சிகள் யாவும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும். மேலதிக விவரங்களுக்கு 021 2211793, 0710318862 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் என அறிவிக்கப்பட்டது. (எ)

## கஞ்சா கடத்திய கோப்பாய் இளைஞன் விளக்கமறியலில்

சாவகச்சேரி, நவ. 27
நள்ளிரவு வேளையில் வாகனத்தில் கஞ்சா கடத்திய கோப்பாய் வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.
சாவகச்சேரி பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு சிறப்பு ரோந்துச் சேவையில் ஈடுபட்டவேளையில் அதிகாலை 2.30 மணியளவில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் சென்ற வாகனத்தை நிறுத்திச் சோதனையிட்டபோது பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா இருப்பதைக் கண்டு வாகனச் சாரதியைக் கைது செய்தனர்.
சாரதியை அன்றையதினம் மாலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது டிசம்பர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ.9)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிகளுக்குத் தண்டம்

சாவகச்சேரி, நவ. 28
அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களில் மணல் ஏற்றிச்சென்ற 3 சாரதிகளுக்கு 70ஆயிரம் ரூபாவும் போக்குவரத்து வழித்தட அனுமதிப்பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற இரு பேருந்துச் சாரதிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் சாவகச்சேரி நீதி மன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றினர் என 3 வாகனச் சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் இரு சாரதிகளுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தார். வழித்தட அனுமதிப் பத்திரமின்றிப் பயணிகளை ஏற்றிச் சென்றார்களென இரு சாரதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. (எ. 9)

## யாழ்ப்பாணத்தில் திண்மக்கழிவகற்றும் பணி முழுமை பெற்றது

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேசத்தில் தேங்கியிருந்த திண்மக் கழிவுகளை அகற்றும் பணி நேற்றுமுன்தினம் முழுமை பெற்றது. மழையின் காரணத்தால் திண்மக்கழிவுகள் அகற்றப்படாததால் தேங்கி சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டன. தேங்கிய திண்மக்கழிவுகளை கழிவகற்றும் பிரிவினர் துரிதமாகச் செயற்பட்டு அகற்றும்பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.
கழிவகற்றும் நடவடிக்கைகள் வட்டார ரீதியாக முன்னெடுக்கப்பட்டன என மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (எ.17)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# 2, 256.9 ஏக்கர் காணிகள் இன்னும் படையினர் பிடியில்

### மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு. நவ.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசமற்றும் தனியார் காணிகளில் 2012இல் இருந்து இன்று வரை 46.1வீதமான காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன. 2ஆயிரத்து 256.9 ஏக்கர் காணிகள் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என அரச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் படையினர் வசமுள்ள 3ஆயிரத்து 470 ஏக்கர் காணிகளில் ஆயிரத்து 859 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பில் படையினர் வசமுள்ள 418.8 ஏக்கர் காணிகளில் 52.5 ஏக்கர் காணிகளும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் படையினர் வசமுள்ள 154 ஏக்கர் காணிகளில் 9 ஏக்கர் காணிகளும், துணுக்காயில் படையினர் வசமுள்ள 106.7 ஏக்கர் காணிகளில் 2 ஏக்கர் காணிகளும், மாந்தை கிழக்கில் படையினர் வசமுள்ள 40 ஏக்கர் காணிகளில் 10 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 256.9 ஏக்கர் காணிகள் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் படையினர் மக்கள் வாழ்விடங்களைக் கையகப்படுத்தி நிலை கொண்டுள்ளார்கள். 2012ஆம் ஆண்டு முகாம்களில் இருந்த மக்கள் கட்டம் கட்டமாக மீள்குடியமர்த்தப்பட்டனர்.

மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள படையினர் கட்டம் கட்டமாக அங்கிருந்து விலகி மக்களை முழுமையாகக் குடியமர்த்த ஒத்துழைத்தாலும் பெருமளவான காணிகள் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்பது அந்தப் புள்ளிவிவரத்தில் தெளிவாகக் காட்டுகின்றது.

'கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் உலகுக்கும், ஐக்கியநாடுகள் சபைக்கும் படையினர் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகளைத் துரிதகதியில் விடுவிப்பதாக உறுதிமொழி அளித்திருந்த நிலையில் காணிவிடுவிப்பு மந்த கதியில் நடைபெறுகின்றது. எங்கள் காணிகளை விடுவிக்காமல் இழுத்தடிப்புச் செய்வதன் ஊடாக அரசு ஒரு அரசியல் நாடகத்தை அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது. கேப்பாபிலவுக் கிராமத்தில் 482 ஏக்கர் காணிகள் இன்னும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. எங்கள் மண்ணில் உள்ள நீர்வளம், நிலவளம், கடல் வளம் எல்லாவற்றையும் படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றார்கள் நாங்கள் பட்டினியால் வாடுகின்றோம் கேப்பாபிலவில் 138 குடும்பங்களும், புதுக்குடியிருப்பிலும், வட்டுவாகல் பகுதியிலும், எங்கள் சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். என கேப்பாப்பிலவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணி உரிமையாளர்களில் ஒருவரான வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

'கேப்பாபிலவில் 138 குடும்பங்களும், புதுக்குடியிருப்பிலும், வட்டுவாகல்பகுதியிலும்எங்கள்சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரிப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

புதுக்குடி யிருப்புப் பகுதியில் 20 குடும்பங்களுக்குச் சொந்தமான 11 ஏக்கர் காணி படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

எமது காணிகளில் உள்ள 150 வரையான தென்னை மரங்களில் இருந்து மாதம்தோறும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தேங்காயைப் பறித்து படையினர் தங்கள் கிராம வியாபாரிகளுக்கே விற்பனை செய்துவருகின்றார்கள். கடந்த மார்ச் மாதம் 4ஆம் திதி எமக்குச் சொந்தமான 7.75 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. மீதம் 11 ஏக்கர் காணிகள் மூன்று மாத காலத்துக்குள் விடுவிக்கப்படும் என்று அரச அதிகாரிகளால் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை 8மாதங்கள் கடந்துவிட்டநிலையிலும் இன்னும் எங்கள் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதிகாரிகள் சொல்லும் வாக்குறுதிகளும் காற்றில் பறந்து விட்டன. ஆனால் எங்கள் வாழ் இடத்தில் உள்ள வருமானங்களை படையினர் பறித்து தங்கள் தேவைகளுக்காக விற்பனை செய்துவருகின்றார்கள். காணி விடுவிப்பு என்பது அரசின் அரசியல் நிகழ்ச்சியாகக் காணப்பட்டாலும், மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் இன்றும் இந்த நாட்டில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதன் உண்மையை எடுத்துக்காட்டுகின்றது. என்று காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர். (எ.21,ரி3)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு பணியிலிணைந்த நாளிலிருந்து சேவைக்காலக் கொடுப்பனவு

### வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சேவைக்காலக் கொடுப்பனவு பணியாளர் பணியில் இணைந்த நாளில் இருந்தே கணக்கிட்டு வழங்கப்படவேண்டும். இதற்காக புதிய சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் கூட்டுறவுப்பணியாளர்கள் குழப்பமடைய வேண்டியதில்லை என்று வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பணியாளர் ஒருவர் சங்கத்தின் பணியில் அதாவது தற்காலிகமாக இணைக்கப்பட்ட நாளில் இருந்தே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

அதனை விட பணியாளர் ஒருவர் தான் பணியில் இணைந்த சங்கத்தில் இருந்து இன்னுமொரு சங்கத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றால் அவர்களின் பணிநாள்களை சேவைக்காலக்கொடுப்பனவுஆணைக்குழுவின் விதிக்கு அமைய கணக்கிடப்படவேண்டும்.

சேவைக்கால கொடுப்பனவு வழங்கும்போது சங்கங்களில் குழப்பநிலை அண்மைக்காலமாக நிலவி வந்தது. ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக இந்தக் கொடுப்பனவை சங்கங்கள் பணியாளர்களுக்கு கணக்கிட்டு வழங்க முடியும் என்றும் ஊழியர் ஆணைக்குழு தெரிவித்தது.

இதேசமயம் அனேகமான பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்கள் இந்த சேவைக் காலக் கொடுப்பனவுகளை பணியாளர்களுக்கு வழங்கி வருகின்றன. அத்துடன் இந்தக் கொடுப்பனவுக்கான நிலுவைப் பணத்தையும் இந்தச் சங்கங்கள் இந்த ஆண்டு வழங்கவும் தீர்மானித்துள்ளன. (எ.17)

## 2018ஆம் ஆண்டுக்கான ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவம் சார்ந்த உத்தியோகத்தர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்.நவ.28

வடக்கு மாகாணத்தில் 2018ஆம் ஆண்டுக்கான ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவம் சார்ந்த பதவிகளுக்கு, விண்ணப்பங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களே நியமிக்கப்பட வுள்ளார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் நிலவும் மருத்துவம் சார்ந்த உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்களை அவர்கள் ஓய்வு பெறும் காலப்பகுதியில் இருந்து ஒருவருடத்துக்கு நியமிப்பது வழமை. ஆனால் 2018ஆம் ஆண்டுக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்துக்கான விண்ணப்பங்கள் பத்திரிகை மூலம் கோரப்பட்டிருந்தன. அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் வெற்றிடங்கள் அதிகமாக உள்ள மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படவுள்ள னர்.

இது தொடர்பான கலந்துரையாடல் மற்றும் நேர்முகத் தேர்வு என்பன கடந்த 22ஆம் திகதி மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நடைபெற்றன.

இதில் ஏற்கனவே உள்ள வெற்றிடங்களான மருத்துவ உத்தியோகத்தர்கள் 3, உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் 9, குடும்ப நல உத்தியோகத்தர்கள் 4, தாதிய உத்தியோகத்தர்கள் 21 ஆகியவற்றை அடுத்த வருடம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ.ரி)

## சனசமூக நிலையங்களுக்கு நடப்பு வருட மானியம்

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாண சபை எல்லைக்குட்பட்டு இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு இந்த வருடத்துக்குரிய மானியம் வழங்கப்படவுள்ளது.

இந்த மானிய நன்கொடைகளை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

சனசமூக நிலையங்கள் இந்த வருடத்துக்கான பொதுக் கூட்ட அறிக்கை, வருடாந்தக் கணக்கறிக்கை ஆகியவற்றை உள்ளூராட்சி சபையில் கையளிக்குமாறும் உரிய அறிக்கைகளுடன் சனசமூகநிலைய பரிசோதனை அறிக்கையுடனான விண்ணப்பத்தை அந்தந்த உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ. 9)

## புதையல் தோண்டிய நால்வர் முழங்காவில் பொலிஸாரால் கைது

### 2ஆம் திகதி வரை விளக்கமறியலிலும் வைக்கப்பட்டனர்

கிளிநொச்சி, நவ.28

கிளிநொச்சி, முழங்காவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்லவராயன்கட்டு சோலை நிலா குடியிருப்புப் பகுதியில் புதையல் இருப்பதாகக்கூறி அதனைத் தோண்ட முற்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம் பெற்றது. புதையல் தோண்ட முற்பட்ட நால்வர் மீது சந்தேகம் கொண்ட மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அந்தத் தகவலின் பிரகாரம் குறித்த பகுதி முற்றுகையிட்டு நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பினால் புதைத்து வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் அங்கு உள்ளது எனத் தெரிவித்தே அந்தப் பகுதி தோண்டப்பட்டுள்ளது. முன்பும் இருதடவை இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் மானிப்பாய் பகுதியையும், ஒருவர் சாவகச்சேரியையும், மற்றையவர் வவுனியாவையும்சேர்ந்தவர்கள்என்பதுவிசாரணைகளில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர் அவர்களை எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (21, 101)

## கால்நடை போதனாசிரியர் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்.நவ.28

வடக்கு மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களை பயிற்சி முறையில் உள்வாங்கும் செயற்பாட்டில் 56 பேர் தெரிவு செய்யப்பட்டபோதிலும் 10 பேர் கடமையை ஏற்காமையால் புள்ளிகள் அடிப்படையில் உள்ள ஏனையவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண 56ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் விவசாய அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடப்பு வருடத்தின் மார்ச் மாதத்தில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இதன்போது 56 பேர் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. பயிற்சிக்கால உத்தியோகத்தர்களாக இவர்களை உள்வாங்கி அவர்களுக்கான கொடுப்பனவு வழங்கி பயிற்சியின் பின் அவர்களை கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர்களாக உள்வாங்கும் செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது. நியமனம் வழங்கப்பட்ட 56 பேரில் 10 பேர் கடமையைப் பொறுப்பேற்கவில்லை.

அத்துடன் மேலும் ஒருவர் தாமாகவே பதிவியிலிருந்து விலகியுள்ளார். ஆகவே தற்போது 11 வெற்றிடம் தோன்றியுள்ளது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு ஏற்கனவே நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய 10 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் 5, கிளிநொச்சி 3, முல்லைத்தீவு 1, வவுனியா 1 என்ற எண்ணிக்கையில் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் நியமிக்கப்படவுள்ள னர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ.ரி)

# மாவீரர்களுக்கு நேற்றுக் காலையும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது

## அச்சுறுத்தல்களுக்கும் குறைவில்லை



எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்



கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில்

மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று உலகெங்கும் பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் நேற்றுக் காலை மாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் மாவீர் துயிலுமில்லங்களில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

வடமராட்சி, எள்ளங்குளம் மாவீர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி ஆகியவற்றில் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளை அலுவலகத்தில் வடக்கு மாகாண சசபை உறுப்பினர் க.தர்மலிங்கத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் தீபம் ஏற்றச் சென்றபோது மாவீரர் துயிலும் இல்லத்தின் வாயிலை மறித்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தைக் குறுக்கே விட்ட இிராணுவத்தினர் துயிலும் இல்லத்துக்கான பாதையையும் தடைசெய்தனர். பெருமளவு இராணுவத்தினர் அங்கு நின்றிருந்தனர். அஞ்சலி செலுத்துவதற்கு அங்கு கூடியவர்களை ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தும்வகையில்நடந்து கொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்து அங்கு பெரும் இராணுவ முகாம் அமைத்துள்ளனர். அதனால் துயிலுமில்ல வீதியோரமே அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இராணுவப் பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட பல சிவில் உடை தரித்த இராணுவத்தினர் அஞ்சலி செலுத்தியவர்களை ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்தனர்.

இருந்த போதிலும் அஞ்சலி செலுத்த வந்தவர்கள் துயிலும் இல்லம் முன்பாக சுமார் 30 நிமிடங்கள் காத்திருந்து அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டனர். தடைகளையும் தாண்டி வீதியோரமாக ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் வடக்கு மாகாண மகளிர் அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் போராளிகள் பொதுமக்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் மூன்று மாவீரர்களின் தாயாரான ஜெயக்குமாரி பாலேந்திரா சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள தமிழரசுக்கட்சியின் கிளை அலுவலகத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க்.தர்மலிங்கம் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(21,108,37,26)

ஒளிப்படங்கள், காணொலி எடுத்து அச்சுறுத்தும்சிவில்உடைதரித்தோர்





கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்









நல்லூரில் உள்ள திலீபனின் நினைவுத் தூபியில்



தமிழரசுக்கட்சியின் வடமராட்சி கிளை அலுவலகத்தில்

# பாலியல் வன்புணர்வைக் கண்டித்து வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்

## மகளிர் அபிவிருத்தி நிலையம் அழைப்பு

வவுனியா, நவ.28

வவுனியாவில் கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட மாணவிக்கு நீதிகோரியும், பாலியல் வன்புணர்வுகளைக் கண்டித்தும் இன்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் வவுனியா மணிக்கூட்டுக் கோபுர முன்றிலில் காலை 9.30 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அந்த நிலையத்தினர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வவுனியாவில் நவம்பர் 14ஆம் திகதி 16 வயது இளம்பெண் ஒருவர் முச்சக்கர வண்டியில் கடத்தப்பட்டு ஐவரினால் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு, பெண்கள் அச்சமின்றி நடமாடும் சூழ்நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது. வித்தியா, வைஷ்ணவி அவர்களைத் தொடர்ந்து ஆங்காங்கே தொடர் சம்பவங்களாக இவ்வாறான வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதும் அதனைத் தொடர்ந்து அந்தப் பெண்கள் கொலை செய்யப்படுவதும் எமது சமூகத்தின் இழிவு நிலையைக் காட்டி நிற்கின்றது. இவற்றைத் தகுந்த முறையில் கேள்விக்குட்படுத்துவது எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

இந்த நிகழ்வைக் கண்டித்தும் இவ்வாறான இழிவான சம்பவங்கள் மேலும் மேலும் இடம்பெறாது இருப்பதை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் இடம்பெறும். இந்த ஆர்ப்பாட்டத்தில் வவுனியா, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் சார் மகளிர் அமைப்புக்களைச் சார்ந்தோர் கலந்து கொள்வதோடு மனு ஒன்றும் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படவுள்ளது- என்றுள்ளது.

மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆரம்பத்தில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் வவுனியா மாவட்ட நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது 28ஆம் திகதி (இன்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பாலியல் வன்புணர்வைக் கண்டித்து கண்டனப் பேரணி ஒன்றும் நடந்திருந்தது. பொலிஸார் மேலும் இருவரைக் கைது செய்திருந்தனர். நால்வரும் இன்று மன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (எ,21)

# அகிம்சை ரீதியில் மீண்டெழ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதுணையாக இருக்கும்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 28

அகிம்சை ரீதியில் மக்கள் மீண்டெழுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உந்துதுணையாக இருக்கும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் விமானத் தாக்குதலில் உயிரிழந்த மக்களின் 27ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரிழந்தவர்களை நினைவிற்கொள்வது மக்களின் அடிப்படை உரிமை. இந்த உரிமையை உலகில் எவராலும் மறுக்கமுடியாது. இந்த உரிமையைக் கோரி மக்கள் தாங்களாகத் திரண்டுள்ளார்கள்.

முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்சவைத் தோற்கடித்து தங்கள் ஜனநாயக உரி மைகளுக்காக இன்று மீண்டெழுந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்று ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். அதில் இராணுவப்பேச்சாளர் ஒருவர், சட்டத்தில் விடுதலைப்புலிகளை அஞ்சலி செலுத்த இடமில்லை. இருப்பினும் மக்கள் தானாக மீண்டெழுந்து செய்வதைத் தடுக்கக் கூடிய நிலமை தங்களுக்கும் இல்லை என்று சொல்லியிருக்கிறார். இதுதான் உண்மை எங்கள் மக்கள் தாங்களாகவே மீண்டெழுந்து கொண்டிருக்கின்றார்கள். தங்கள் உரிமைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக போராடிக்கொண்டிருக்கின்றார்கள் அகிம்சை ரீதியான போராட்டம், உயிரிழந்த உறவுகளை நினைவிற்கொள்வது. அகிம்சை ரீதியான உரிமை இந்த உரிமைகளை நிலைநாட்ட மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த மண்ணில் வாழ்ந்த உயிர்களை அஞ்சலி செலுத்துவது எங்களுடைய கடமை. வாழவேண்டியவர்கள் இளைய வயதிலேயே இங்கு கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இன்று விடுதலைப்புலிகளின் ஆயுதபலம் இல்லாதொழிக்கப்பட்ட நிலையில் அகிம்சைரீதியில் நாங்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை அடக்கி ஒடுக்கப் படையினரோ இந்த அரசோ முற்படக்கூடாது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு எதிரான எந்த ஒரு கூக்குரலுக்கும் நாங்கள் அடங்கி ஒடுங்கிப் போவதில்லை.

எமக்கென்ற ஒரு வரலாற்றுக்கடமை உண்டு. அந்தக் கடமையை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் இந்த வரலாற்றுக் கடமையினை கட்டிக்காத்து இன்னுமொரு தலைமைத்துவத் திடம் பொறுப்பெடுக்கும் வரை காத்து அவர்களிடம் நாங்கள் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றார். (எ.21, ரி3)



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் சிவன் ஆலயத்தின் முன்பாக 1990.11.27 அன்று இலங்கை இராணுவத்தின் விமானத்தாக்குதலில் 12 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் 27ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி நிகழ்வு வன்னி குறோஸ் தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில், ஒட்டுசுட்டான் பிரதேச வர்த்தகர்களின் ஆதரவில் உணர்வுபூர்வமாக நேற்றைய தினம் காலை 9.30 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை உயிர்நீத்தவர்களின் உறவினரான விமலாமணி சுப்பிரமணியம் என்பவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து உயிர்நீத்த உறவுகளின் உருவப்படங்களுக்கு மலர்மாலை உறவுகளால் அணிவிக்கப்பட்டது. நிகழ்வில் ஏராளமானோர் கலந்துகொண்டு கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (எ,21, ரி3)

## மூதாட்டி காயம்

வாகனத்திலிருந்து இறங்க முற்பட்ட வேளையில் தவறி வீழ்ந்து காயமடைந்த மூதாட்டி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

பயணிகள் வாகனத்தில் பயணித்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வராசா செல்லக்கிளி (வயது-60) என்னும் மூதாட்டி வாகனத்திலிருந்து இறங்கும் வேளையில் சேலை தடுக்கியதால் கீழே வீழ்ந்ததில் முழங்காலில் பாதிப்பு ஏற்பட்டது. இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். (எ.9)

# இராணுவத்தினர் ஒத்துழைப்புடன் வவு.கலாசார மண்டபம் சீரமைப்பு

## பிரதேச செயலர் தெரிவிப்பு

வவுனியா, நவ. 28

வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தின் சீரமைப்புப்பணிகள் வன்னிப்படைகளின் பிரதானியின் வழிநடத்தலில் இராணுவத்தினரின் உதவியுடன் இடம்பெற்று வருகின்றன என வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசா தெரிவித்தார்.

குடியிருப்புக் கலாசார மண்டபத்தின் பணிகளைப் பார்வையிடுவதற்கு அண்மையில் சென்ற அவர் சீரமைப்புப் பணிகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 26வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் பயன்பாட்டிலிருந்த குடியிருப்புக் கலாசார மண்டபத்தை கடந்த வருடம் இராணுவத்தினர் மாவட்ட செயலகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர். அதையடுத்து பல அமைப்புக்களிடம் கலாசார மண்டபத்தின் சீரமைப்பு மேற்கொள்வதற்குப் பண உதவி கோரியிருந்தோம்.

எனினும் எந்த நிறு வனங்களும் முன்வரவில்லை. இதன்காரணமாகவே இராணுவத்தினரின் உதவி பெறப்பட்டது. அதனடிப்படையில் கலாசார மண்டபம் மிக விரைவில் சீரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது - என்றார். (எ.21)

## மதிய உணவுத் திட்ட நிறுத்தப்படவுள்ளதால்

# மாணவர்களுக்குப் போசாக்கு உணவை வழங்க பெரும் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் நவ 28

உலக உணவு அமைப்பின் ஊடாகப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உணவுத் திட்டம் இந்த வருடத்துடன் நிறுத்தப்படவுள்ளது. இதனால் அடுத்த வருடம் முதல் மாணவர்களுக்குப்போசாக்கு உணவை வழங்குவதில் பெரிய சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

உலக உணவு அமைப்பின் ஊடாகப் பாடசாலை மாணவர்களுக்கு மதியத்தில் போசாக்கு உணவுகளை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வளவு காலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் அவர்கள் அறிமுகப்படுத்திய போசாக்கு உணவுத்திட்டத்தை நிதியில்லை என்ற காரணத்தால் நடப்பாண்டுடன் நிறுத்துவது என அறிவித்துள்ளனர்.

இதனால் எமது மாகாணத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் போசாக்கு மட்டம் வீழ்ச்சி அடைவதற்கான அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நாம் கொழும்பு அரசுடன் கலந்துரையாடியிருந்தோம். அந்தக் கலந்துரையாடலில் அரசின் நிதி உதவியுடன் தரம் 1 தொடக்கம் தரம் 5 ஆம் ஆண்டு வரையான பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவை வழங்கும் திட்டத்துக்கு நிதியுதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர் - என்றார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்களில் வன்னி மற்றும் தீவகப் பிரதேசங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் போசாக்கு மட்டத்தில் குறைவாக உள்ளதுடன் அவர்களில் பலர் காலை உணவுகளைக் கூட உண்ணாது பாடசாலைக்கு நீண்ட தூரம் பயணித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் போசாக்கு உணவுத் திட்டம் நிறுத்தப்படுவதால் அதிகளவில் அவர்களே பாதிக்கப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ.8)

# மாவீரர்களை அஞ்சலிக்க அனுமதிக்கவேண்டும்

## பிரிட்டன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 28

வடக்கு - கிழக்கில் போரில் இறந்தவர்களைச் சுதந்திரமாக நினைவு கூருவதற்கு அரசு தமிழர்களை அனுமதிக்க வேண்டும் என்று தமிழர்களுக்கான பிரிட்டன் நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவீரர் நாளை முன்னிட்டு, தமிழர்களுக்கான பிரிட்டன் நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் போல் ஸ்கலி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அச்சுறுத்தல்கள் மற்றும் உரிமை மீறல்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து இடம்பெற்ற போதிலும், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள், அழிக்கப்பட்ட கல்லறைகளைத் தூய்மைப்படுத்தும், நினைவுகூரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

போரில் இறந்தவர்கள் தமிழர்கள் பகிரங்கமாக நினைவுகூருவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், நினைவுகூரல் முயற்சிகளை அரசு அச்சுறுத்தல்களை விடுத்துத்தடுத்து வந்துள்ளது. போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் அரசின் செயற்பாடுகள் மந்தகதியில் இருப்பது கவலையளிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாகவும், கால வரையறையுடனும், நடைமுறைப்படுத்துமாறு, ஐ.நா. உறுப்பு நாடுகளுடன் இணைந்து கோருகிறோம் - என்றுள்ளது. (5)

# அரச தலைவரை விமர்சித்த பிரதியமைச்சரின் பதவி பறிப்பு?

கொழும்பு, நவ. 28

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவின், பதவியைப் பறிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்பில், தான் கடுமையான அதிருப்தி கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, சிலருடைய தேவைகளுக்காக, ஐக்கிய தேசியக் கட்சியின் இளம் அரசியல்வாதிகளைச் சின்னாபின்னமாக்குவதற்கு, அரச தலைவர் பங்குதாரராக இருக்கக் கூடாது, என்றும் கேட்டுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

பிரதியமைச்சரின் குற்றச்சாட்டுத் தொடர்பில் கடும் அதிருப்தி கொண்ட, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள், இந்த விவகாரம் தொடர்பில், கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கட்சியின் தவிசாளர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர். இந்த நிலையிலேயே, அவருக்கு எதிராக, கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது.

அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அழைப்பதற்கு முன்னர், பிரதியமைச்சர் பதவியை, சுஜீவ சேனசிங்கவிடமிருந்து பறிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

பிரதியமைச்சரின் பதவியைப் பறிக்கும் அதிகாரம், அரச தலைவர் கைகளில் இருப்பதால், அரச தலைவர் அது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவேண்டுமென, அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (5)

# பைசர் முஸ்தபாவுக்கு தேர்தலைவிட வெளிநாட்டுப் பயணம் முக்கியமானதா?

## *சபையில் ஜே.வி.பி. கேள்வி*

கொழும்பு, நவ. 28

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இழுபறியில் உள்ள போது அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாடு சென்றுள்ளார். தேர்தல் நடத்துவதை விட அமைச்சருக்கு வெளிநாட்டுப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததா ? இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்ககேள்விஎழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டு ஆண்டுகள் ஏற்கனவே தாமதமாகி விட்டன. இப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தயார் செய்யப்பட்ட எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலுக்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தேர்தல் நடத்தப்படுவது கேள்விக்குறியாக மாறியுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அமைச்சர் பைசர் முஸ்தபா தனது எல்லையை மீறிச் செயற்பட்டுள்ளமை நிரூபணம் ஆகியுள்ளது. இந்த வழக்கின் போது அமைச்சர் நீதிமன்றத்துக்கு வருகை தரவும் இல்லை. இவ்வாறான சிக்கலான நிலமை ஏற்பட்டுள்ள சூழலில் அமைச்சர் பைசர் முஸ்தபா நாட்டு மக்களுக்கு எந்தவொரு தெளிவூட்டலும் செய்யவும் இல்லை. அது மாத்திரமின்றி நாடாளுமன்றத்துக்கும் இதுவரை வரவில்லை. இந்த நிலையில் அமைச்சர் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி பிரசுரித்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இழுபறியில் உள்ள நிலையில் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாடு சென்றுள்ளாரா? தேர்தல் நடத்துவதைவிட வெளிநாட்டுப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததா? அமைச்சர் என்ன காரணத்துக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். இவர் சென்றமை இராஜ தந்திர ரீதியான உத்தியோக பூர்வ பயணமா? அல்லது பிரத்தியேக பயணமா ? என்று கேள்வி எழுப்பினார். (5,31)

### பிரிட்டன் எம்.பியின் கருத்துக்கமைய போர்க்குற்றச்சாட்டுக்கு பதிலளிப்போம்

*மாரப்பன கூறுகின்றார்*

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் நேவிஷ்பி பிரபுவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு போர்க் குற்றச் செயல் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்ததாவது:

இலங்கையில் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் நேவிஷ்பி பிரபுவின் கருத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இறுதிக் கட்டப் போரின் போது 40 ஆயிரம் பொது மக்கள் உயிரிழக்கவில்லை எனவும், 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இலங்கை தொடர்பில் குற்றம் சுமத்தி வரும் தரப்பினருக்குப் பிரபுவின் கருத்தைப் பதிலடியாகக் கொடுக்க முடியும் - என்றார். (5)

# நாட்டின் தலைமைப் பொறுப்பில் தமிழர்கள் அமர்வதற்கு காலம் எடுக்கும்

## நாடாளுமன்றில் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 28

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கே எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது எனில், சிறுபான்மையினர் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆசனங்களில் அமர்வதற்கு நீண்டகாலம் செல்லும் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூவின மக்கள் இணைந்து தயாரித்ததே தேசியக் கொடியாகும்.

அதற்கு மதிப்பளிப்பதற்கு எமக்குப் பிரச்சினையில்லை. வட மாகாண அமைச்சரின் தேசியக் கொடி சம்பந்தமான விவகாரத்தில் அரசியல் ரீதியாகப் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் கோத்தபாய ராஜபக்சவை விசாரணைக்கு அழைத்த போது மகிந்த அணி தேசியக் கொடிக்குப் பதிலாக வேறு கொடியைக் கொண்டு வந்தனர். இது தொடர்பில் எவரும் பேசவில்லை.

இலங்கையில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்க முற்பட்டபோது அதற்கும் எதிர்ப்பு வெளியிட்டனர். முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்திரிகா அம்மையார் தலைமை அமைச்சராக்க முனைந்த போது எவரும் இடமளிக்கவில்லை.

இந்தியாவிலும் அமெரிக்காவிலும் சிறு பான்மையினத்தவர்கள் தலைமை அமைச்சர் பதவியில் இருந்துள்ளனர்.

எனினும் இலங்கையில் தமிழ்மொழியில்தேசியகீதம் இசைப்பதற்கே பெரிய எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது என்றால், சிறுபான்மையினர் அரச தலைவர், தலைமை அமைச்சராக வேண்டுமாயின் நீண்ட காலம் செல்லும் - என்றார். (5,31)

# அமைச்சர் பைசர் வெளிநாடு போவதாக அறிவிக்கவில்லை

## *லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் தெரிவிப்பு*

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாட்டுக்குச் செல்வதாக எமக்கு அறிவிக்கவில்லை என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்ட விவாத காலப் பகுதியில் எவரும் வெளிநாட்டுக்குப் பயணிக்கக் கூடாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை விடுத்துள்ளார். அந்த ஆலோசனையை எவரும் பின்பற்றவில்லை. எனினும் அமைச்சர் வெளிநாட்டுக்குப் பயணிப்பதாகத் தெரிவிக்கவில்லை - என்றார். இதனையடுத்து கேள்வி எழுப்பிய அநுர குமார, அமைச்சர் நாட்டில் உள்ளாரா? அவர் வீட்டில் இருந்தால் சபைக்கு வருவார் என்று கேட்டார். அமைச்சர் வெளிநாட்டுக்குப் பயணம் செய்துள்ளார். நாட்டில் இல்லை என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்லசிரித்துகொண்டே பதிலளித்தார். (5,31)

# இலங்கை அரசுக்காக பன்னாட்டு அரங்கில் குரல் கொடுத்த நேஷ்வி பிரபுக்கு நாடாளுமன்றக் கதவு திறந்தே உள்ளது

## *அயலுறவுத்துறை அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 28

இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்கள் சில ஆயிரம்பேர் மட்டுமே என்று பன்னாட்டு அரங்கில் உண்மையைக் கூறிய நேஷ்வி பிரபு, எப்போது வேண்டுமானாலும் நாடாளுமன்றத்துக்கு வரலாம். நாம் அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம்.

இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அயலுறவுத்துறை அமைச்சு மீதான விவாதம்கடந்தசனிக்கிழமை நடைபெற்றது.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் நேஷ்வி பிரபு இறுதிப் போரில் உயிரிழந்த மக்கள் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவரது தகவலுக்கும், ஐ.நா.வின் தகவலுக்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றது. இலங்கை மீதான குற்றங்களைக் களையும் வகையில் நேஷ்வி பிரபு கருத்து வெளியிடுகையில், அரசு என்ற ரீதியில் உங்களது கருத்துக்கள் ஒருமித்தல்லவா இருக்கவேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, நாங்கள் நேஷ்வி பிரபுவின் கருத்துக்களை இதய சுத்தியுடன் ஏற்றுக் கொள்கின்றோம். எமது அயலுறவுக் கொள்கை சரியாகவே உள்ளது. வேறுபாடுகள் அதில் இல்லை. நாம் அவரது கூற்றைச் சரியான வகையில் பயன்படுத்துவோம். தருஸ்மன் அறிக்கையில் 40ஆயிரம் பேர் இறுதிப் போரில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றபோதும், நேஷபி பிரபு அதனைப் பொய்யாக்கியுள்ளார். அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நேஷபி பிரபுவை பிரிட்டன்நாடாளுமன்றத்தில் சந்தித்தேன். அவர் எமது நட்புறவுச் சங்கத்திலும் உள்ளார். அவரை எமது நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரவேண்டும். அந்தக் கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன் - என்றார்.

இதற்குப் பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, நாம் ஏற்கனவே அவருக்கு அழைப்பு விடுத்துள்ளோம். அவர் விரும்பிய நேரத்தில் வரலாம் - என்றார். (5,31)

# மாவீரர்தினம் கொண்டாடுவோரும் புலிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம்

## அமைச்சர் சம்பிக்க சீற்றம்



கொழும்பு, நவ. 28
வடக்கில் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்போரும்புலிகள்தான். அவர்கள் மீது நிச்சயம் நாம் நடவடிக்கை எடுப்போம். இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்கள் விடுதலை முன்னணியினர் தமது அமைப்பிலிருந்து உயிரிழந்த வீரர்களை நினைவுகூர முடியும் என்றால், விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிரிழந்தவர்களை ஏன் நினைவுகூர முடியாது என்று சிலர் கேட்கின்றனர். விடுதலைப் புலிகள் மக்களைக் கொலை செய்த இயக்கம்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கமோ அல்லது வேறு யாராவதோ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரைக் கொண்டாடினால், அவர்கள் விடுதலைப் புலிகள் சார்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களாகுவர்.
பயங்கரவாதிகளை மீண்டும் வீரர்களாக மாற்ற முயற்சிக்கின்றார்கள். விகாரைகள் மீதுதாக்குதல் நடத்திக் கொலை செய்தவர்களை வீரர்களாக மாற்றநினைப்பவர்களும் பயங்கரவாதிகள்தான். அவர்களுக்கு எதிராக நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.
வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் இலங்கை இராணுவத்தினால்தான் உருவானது. இல்லாவிடில் கூட்டமைப்பு தமிழ்ச்செல்வனின் காலைக் கழுவிக் கொண்டிருக்கவேண்டியிருக்கும்.
சிவாஜிலிங்கம் முதலில் இராணுவத்தினரை நினைவு கூர்ந்துதான் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.
(5,ரி4)

# வாள்வெட்டுக் கும்பலின் மேலும் இரு உறுப்பினர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ.28
வாள்வெட்டுக் குழுவின் உறுப்பினர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். சாவகச்சேரிப் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். குறித்த நபர்களை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்த போது பயணித்த மோட்டார் சைக்கிளில் இருந்து வாள் கண்டெடுக்கப்பட்டது.
சந்தேக நபர்கள் சாவகச்சேரிப் பகுதியை சேர்ந்த 21, 22 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் இவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**பெயர் மாற்றம்**
வரணி கரம்பைக்குறிச்சி என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **கதிரன் வேலன்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **கதிரன் கந்தையா** என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
**க. கந்தையா**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**
Academic Programme
The Academic Programme for the New Batch (2016 A/L) of Medical Students will commence on Monday, 04th December 2017. An Inauguration Programme will be held on the same day at 08.30 a.m in the Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil.
It is appreciated that the parents of each student attend this Inauguration Programme.
- Registrar -

**வேலைவாய்ப்பு**
வட்டுக்கோட்டையைத் தளமாகக் கொண்டு இயங்கும் சமூக சேவை நிறுவனம் ஒன்றுக்கு
- அலுவலக உதவியாளர்,
- கணினி உதவியாளர் தேவை.
- ✓ க.பொ.த. உயர்தர சித்தி
- ✓ கணினி அறிவு உடையவர்களாயிருத்தல் (தமிழ் தட்டெழுத்து தெரிந்திருத்தல் அவசியம்)
- ✓ ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- ✓ வட்டுக்கோட்டையை அணிமித்த பிரதேசத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ சமூக சேவை நோக்கம் கொண்டவர்களாயிருத்தல் அவசியம்.
- ✓ அர்ப்பணிப்பும் ஒழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- ✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 09.12.2017 இற்கு முன்னர் தங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய முகவரி :-
உதயவாழ்வு அலுவலகம்
அத்தியடி பிள்ளையார் கோயில் முன்பாக, வட்டுக்கோட்டை.
E-mail - vadduoffice2@gmail.com



தேசிய மரம் நடுகை மாதத்தையொட்டி கச்சாய் அ.த.க.பாடசாலை வளாகத்தில் அதிபர் அசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரால் நேற்று மரக்கன்றுகள் நடப்பட்டது. (ற,ரி4,9)

**உடன் தேவை**
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு ஒரு மாத காலத்திற்கு கடமையாற்ற
PROMOTION GIRLS
உடன் தேவை.
தொடர்பு :- 077 477 3481

**லொறி விற்பனைக்கு**
ASHOK LEYLAND - PATNER லொறி 14½ அடி அலுமினியம் பொடி - LL - XXXX 32000 Km ஓடியது. உடன் விற்பனைக்கு.
077 742 2604

**தேவை**
மேசன், கூலியாள், சாரதி ( AD வகை) பொதி ஏற்றி இறக்குபவர் தேவை.
075 795 3805/ 077 841 7582

**மணமகள் தேவை**
யாழ் இந்து, கௌரவமான குடும்பம், 1978, குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்ற Londan PR உள்ள 7 இல் செவ்வாய், கிரக பாவம் 92, திருவாதிரை நட்சத்திரம், மிதுன இராசி, படித்த மணமகனுக்கு A/L படித்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. (விவாகரத்தானவர்கள் வேண்டாம்.)
தொடர்பு :- 075 038 4721
Viber :-0044744 036 6127

**Yarl International College Of Skills Development**
YICSD COLLEGE
மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!



அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
சனி, ஞாயிறு பிரிவுகள் 03.12.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.12.2017 அன்று 10.00 மணிக்கு
பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
#அழகுக்கலை பயிற்சிகள் யாவும் Yarl Beauty உடன் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

## வடக்கில் மாவீரர் தினம் கொண்டாடுவோர் மீண்டும் முள்ளிவாய்க்காலுக்குச் செல்வீர்கள்

*சபையில் எச்சரித்தார் மகிந்த அணி எம்.பி*

கொழும்பு, நவ. 28
மாவீரர்தினம்கொண்டாடுவோர் 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடந்த இடத்துக்கே மீண்டும் செல்ல வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அரசு மீது கடுமையான விமர்சனங் களை அவர் முன்வைத்துக் கொண்டிருந்தார். இதன்போது, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குறுக்கீடு செய்த போதும் அவருக்கு ஒலிவாங்கி வழங்கப்படவில்லை. ரோஹிதவைப் பார்த்து மிகக் கடும் தொனியில் கருத்துக்களைக் முன்வைத் தார். இதனையடுத்து அமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை நிறுத்திய ரோஹித, வடக்கில் உள்ள மகிழ்ச்சி தெற்கிலும் இருக்க வேண்டும். எனினும் மாவீரர் தினம் கொண்டாடுவோர் 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடந்த இடத்துக்கே மீண்டும் செல்ல வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றார்.
(5,31)

## கனேடியத் தூதுவர் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், நவ. 28
இலங்கைக்கான புதிய கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.
அங்கு அவர், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகத்தினர், யாழ். மறைமாவட்ட ஆயர் உள்ளிட்ட மதகுருமார்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (5)

## பதவிகளை கேட்கவில்லை

*மகிந்த தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 28
சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் நடத்தப்படும் கலந்துரையாடல்களின் போது பதவிகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
அஹூங்கல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
'தலைமை அமைச்சர் பதவி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாகத் தெரிவிக்கப்படும் கருத்து முற்றிலும் பொய்யானது' என்று மகிந்த குறிப்பிட்டுள்ளார்.
(5)

# தேர்தலைத் தாமதப்படுத்துவது நல்லாட்சி அரசுதான்

## தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 28
உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்தும் சதியின் பின்னாலிருக்கும் முதல் சூத்திரதாரி நல்லாட்சி அரசு என்பது தெரியவந்துள்ளது. நல்லாட்சி அரசை ஆட்சிபீடம் ஏற்றிய மக்கள் விடுதலை முன்னணி, தேர்தலைத் தாமதப்படுத்தும் இரண்டாம் தரப்பாகும்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நல்லாட்சி அரசுதான் தேர்தலைக் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்றது என்பது தற்போது எமக்குத் தெரியவந்துள்ளது. இவ்வாறான ஒரு அரசை ஆட்சியில் அமர்த்திய மக்கள் விடுதலை முன்னணிதான் தேர்தல் தாமதத்துக்குப் பொறுப்புகூற வேண்டிய இரண்டாம் தரப்பினராவர்.

இன்றளவில் நல்லாட்சி அரசு மூன்று வருடங்களாகத் தேர்தலைக் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்றது. இதற்குக் கடந்த அரசினால் செய்யப்பட்ட எல்லை நிர்ணயச் செயற்பாடுகளைக் குறை கூறுகின்றனர். மறுமுனையில் இதே விடயத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தேர்தலைத் தாமதப்படுத்துகின்றார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகவும் தற்போதைய அரசில் உள்ள அமைச்சர்கள் சிலரின் அலுவலக சேவையாளர்களினாலேயே மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இது தேர்தல் காலம் தாழ்த்துவதற்கான சதி முயற்சியாகும்.

இவ்வாறிருக்கையில் நல்லாட்சி அரசு ஆட்சிபீடமேற்றிய மக்கள் விடுதலை முன்னணி தற்போது இந்த அரசைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்கு மகிந்த் அணியை அழைப்பதானது வேடிக்கையாகவுள்ளது. எவ்வாறாயினும் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு நல்லாட்சி அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு துணைபோன காரணத்துக்காக நாட்டு மக்களிடத்தில் மக்கள் விடுதலை முன்னணி பகிரங்கமாக மன்னிப்புக் கோரினால் அவர்களுடன் இணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்கலாம் - என்றார். (5)

# அம்பாறை, மட்டக்களப்பில் அடைமழை

மட்டக்களப்பு, நவ. 28
அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. பெரும்பாலான பிரதேசங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாகக் கடும் மழை பெய்து வருகின்றது. வயல்கள், குடியிருப்புப் பகுதிகள் எல்லாவற்றிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு முதல் கடும் மழை பெய்து வருகின்றது. அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு உள்ளிட்ட தாழ்நிலப்பகுதிகள், வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக அலுவலக நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளதுடன், பரீட்சைக்காகப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். (5.46)


# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
# மீள்கேள்வி அறிவித்தல் - 2018

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2018 இலிருந்து 31.12.2018 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 28.11.2017முற்பகல் 9.00 மணி தொடக்கம் 12.12.2017 நண்பகல் 12.00 மணிவரை (அலுவலகநாட்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 2017.12.12 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 2017.12.12 பி.ப 01.00 மணி

| இல | குத்தகைவகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவகட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1.000.00 | 60.000.00 | 5.605.000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 18.000.00 | 1.652.000.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1.000.00 | 20.000.00 | 1.960.000.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 7.000.00 | 633.500.00 |
| 5 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1.000.00 | 18.000.00 | 1.560.500.00 |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 6.000.00 | 496.550.00 |
| 7 | விசுவமடுபொதுச்சந்தைகோழியிறைச்சிக் கடை | 1.000.00 | 5.000.00 | 332.000.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1.000.00 | 6.000.00 | 48.600.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 2.000.00 | 110.220.00 |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 1.000.00 | 56.040.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1.000.00 | 3.000.00 | 192.600.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 2.000.00 | 138.000.00 |
| 6 | கற்சிலை மடுகோழியிறைச்சிக் கடை (குத்தகைதாரரால் தற்காலிகமாக கடை அமைக்கப்படல் வேண்டும) | 1.000.00 | 1.000.00 | 36.000.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டணகழிப்பறை | 1.000.00 | 2.000.00 | 95.000.00 |
| 2 | மாங்குளம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 2.000.00 | 68.189.00 |

## நியந்தனைகள்

- கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை செயலாளர், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. இறைச்சிக் கடைகளுக்கான சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் ½பங்கினையும் ஏனைய சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியையும் 2017.12.18 ஆம் திகதியிலோ அதற்கு முன்னரோ செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்விப்பத்திரத்தினை பெறவிரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசியஅடையாள அட்டையின் பிரதி.தாம் வதியும் வதிவிடத்தின் வதிவிடசான்றிதழ் ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபாரம் நடைபெறும் போது பொது மக்கள் இருபக்கமும் நிறையினைஅவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
- மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் (1Kmசுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு, விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இட வாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00ம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித் கட்டணமும் அறவிடக்கூடாது.
- புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடுசந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.
- பொதுமலசலகூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக்கூடாது.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சிவகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
- சந்தைவளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு எந்தவிதமான வரியும் அறவிடக் கூடாது.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.
- மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.ந.ஜெயராஜா,**
**செயலாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2017.11.27**



# இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி கௌசலா றமேஸ்
அவர்களின் தந்தையார்

**தம்பையா யோகநாதன்**

அவர்கள் 25.11.2017 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**



# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 . 08 . 1940

மறைவு
28 . 11 . 2015

**அமரர் டேவிட் சின்னத்துரை**

தந்தைக்கு தந்தையாக நண்பனுக்கு நண்பனாக
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் ஐயாவே!
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் ஐயா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

கோப்பாய் மத்தி,
சூசையப்பர் கோயிலடி.

குடும்பத்தினர்

# 'தந்தையின் சாவு ஊர்வலம்'

## மகிந்தவைப் பற்றி புத்தகம் எழுதுகிறார் விஜயமுனி சொய்சா

கொழும்பு, நவ. 28

அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த பின்னர், 'தந்தை இறந்துவிட்டார்' எனக் கருத்து வெளியிட்டுப் பெரும் சர்ச்சைக்குள்ளான அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, 'தந்தையின் சாவு ஊர்வலம்' என்ற பெயரில் புத்தகமொன்றை எழுதி வருகிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் ஏன் தோற்றது? எங்கு தவறிழைக்கப்பட்டது? என்பது உள்பட மேலும் பல தகவல்களைப் புத்தகத்தில் அவர் உள்ளடக்கவுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றார். இதையடுத்துச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியும் மைத்திரி வசமானது.

அது மட்டுமல்ல, மகிந்த பக்கமிருந்தவர்கள், மைத்திரியுடன் இணைந்து கூட்டரசு அமைக்கவும் பச்சைக்கொடி காட்டினர்.

சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மகிந்த தூக்கப்பட்டதற்கு கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளும், மகிந்தவின் சகாக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த நிலையில்தான், 'தந்தை மீது அளவுகடந்த பாசம் இருந்தாலும், அவர் இறந்த பின்னர் சடலத்தை வீட்டில் வைத்திருக்க முடியாது' என்று மகிந்த அணிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார் விஜயமுனி சொய்சா.

'தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்துவிட்டார். தேர்தலில் தோல்வியடைந்த ஒருவரை எப்படிக் கட்சித் தலைவராக வைத்திருப்பது' என்பதே அவரின் கருத்தின் சுருக்கமாகும்.

விஜயமுனி சொய்சா இவ்வாறு கருத்து வெளியிட்ட பின்னர், அரசியற் களத்தில் அது பேசு பொருளாக மாறியது. மகிந்த ராஜபக்ச கூட இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த நிலையில்தான், அது தொடர்பாகப் புத்தகமொன்றை அவர் எழுதவுள்ளார். இதை அவர் உறுதிப்படுத்தியும் உள்ளார். (5)

# அவையில் மூண்டது கடும் சொற்போர் அமைச்சரோ குறட்டையடித்து தூக்கம்

கொழும்பு, நவ. 28

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிராக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் சபையில் நேற்று சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இதன்போது மூத்த அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

இதனால், அவரைத் தட்டி எழுப்புமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கோரிக்கை விடுத்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு உட்பட தினப் பணிகள் முடிவடைந்த பின்னர், 2018ஆம் ஆண்டு நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான 15ஆம் நாள் விவாதம் ஆரம்பமானது. இதன்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் துறை சார் அமைச்சர் பைசர் முஸ்தபா விளக்கமளிக்க முயற்சித்தார். இதையடுத்து அவருக்கும், மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையே கடும் சொற்போர் மூண்டது.

மகிந்த அணியும் அமைச்சர் மீது விமர்சனக் கணைகளைத் தொடுத்தது. இதனால், சபையில் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

எனினும், அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு அருகிலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

'கூட்டாக வங்குரோத்து அரசியலைச் செய்து விட்டு எப்படி உறங்குகிறார். அவரை எழுப்பி விடுங்கள்' என்று இரண்டுமுறை கூறியும் நிமல் சிறிபால டி சில்வா வின் காதுகளுக்கு அநுரவின் குரல் கேட்கவில்லை. பின்னர் திடுக்கிட்டு எழுந்த அமைச்சர் நிமல் சபை யில் என்ன நடக்கின்றது என்றே தெரியாது கண்ணை முழித்துக் கொண்டிருந்தார். (5)

# கோத்தபாய ராஜபக்ச கைது!

## சட்டமா அதிபர் திணைக்களம் பச்சைக்கொடியாம்

கொழும்பு, நவ. 28

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச இந்த வாரத்தில் கைது செய்யப்படவுள்ளார் என்றும், இதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது என்றும் தாய் நாட்டுக்கான இராணுவ அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் மேஜர் அஜித் பிரசன்ன இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்நாட்டுப் போரை முடிப்பதற்காகத் தனது உயிரைப் பணயம் வைத்துப் போராடியவர். தற்போது அவரைப் பழிவாங்குவதற்கு இந்த அரசு துடிக்கின்றது. கோத்தபாய ராஜபக்ச இந்த வாரம் கைது செய்யப்படுவார் என்று அறியமுடிகின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. பொலிஸ் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு அதன் பின்னரே அவரைக் கைதுசெய்வதற்குரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நாம் அனைவரும் போராடவேண்டும் - என்றார். (5)


## மரண அறிவித்தல்



### திருமதி அன்னமுத்து செகராசா

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து செகராசா 26.11.2017 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செகராசாவின் அன்பு மனைவியும், செல்வராணி (ஜேர்மனி), ரவீந்திரன் (லண்டன்), புவனேந்திரன் (லண்டன்), கமலேந்திரன் (உதவி அஞ்சல் அதிபர் - அனுராதபுரம் அஞ்சல் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம் (ஜேர்மனி), செல்வரதி, இரத்தினாவதி (லண்டன்), அருள்மதி ஆகியோரின் அன்பு மாமியும்,காலஞ்சென்றவர்களான இராசம்மா, மாரிமுத்து, பொன்னம்மா, கிருஷ்ணபிள்ளை, தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மைத்துனியும், நிவிதா, அஜிந், நிவர்ணன், நிருஷன், நிதர்ஷன், சாகுசன், விதுஜா, தனோபன் (யாழ்.இந்துக் கல்லூரி தரம் 10), கவிஜா (மாணவி- யாழ்.இந்து மகளீர் கல்லூரி தரம் 08), திவிஜா (மாணவி - யாழ்.வேம்படி மகளீர் கல்லூரி தரம் - 06) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்செழு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**செ.கமலேந்திரன்**

**021 224 1579**

## மரணஅறிவித்தல்



### சிவஸ்ரீ நாகலிங்கஐயர் யோகீஸ்வரக்குருக்கள்

*(பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில் ஸ்தானிககுருவும் நாரந்தனை கந்தசாமி கோயில் முன்னைநாள் பிரதமகுருவும், அத்தியடி பிள்ளையார் கோயில் முன்னைநாள் குருவும்)*

சரவணை நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்க ஐயர் யோகீஸ்வரக்குருக்கள் 27.11.2017 திங்கட்கிழமை காலை முருகன் பாதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கஐயர் அம்மணி அம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் நயினாதீவு ஜம்புகேஸ்வரக்குருக்கள் மீனாம்பா தம்பதிகளின் மருமகனும் சுபதாம்பிகை அம்மாவின் பாசமிகு கணவரும் கேதீஸ்வரசர்மா (துன்னாலை முறாவில் சித்தி விநாயகர் ஆலயம்) ஞானேஸ்வரக்குருக்கள் (கூமாங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம் - வவுனியா), சயாதேவி, நித்தியானந்தினி, காலஞ்சென்ற பிரபாகரேஸ்வரக்குருக்கள் (அத்தியடி பிள்ளையார் முன்னைநாள் குரு) மற்றும் ரஞ்சிதக்குருக்கள் (கப்பித்தாவத்தை சிவன் கோயில் மருதானை - கொழும்பு), ஜெகதீஸ்வரக்குருக்கள் (பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயம்), காலஞ்சென்ற கிருஷ்ணைராஜ சர்மா மற்றும் சுபாஸ்கரக் குருக்கள்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தனலட்சுமி, கலாராணி, ஜீவநாதசர்மா, காலஞ்சென்ற கணேசராஜக்குருக்கள் மற்றும் நாகேஸ்வரி, ரமாராணி, தாரணி, வைதேகி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரமாஜிதசர்மா, சுவஸ்திகா - சாந்தரூபசர்மா, சுதாத்மிகா, ராகினி - அனந்தன்(U.K), யாழினி - கணேசராஜ குருக்கள் (B.F.A. ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஜீவசௌமியா - கேசவசர்மா(Canada), ஜீவசரண்யா, லக்ஷ்விகா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஸ்மிருதிகா, ரித்விகா, ஜோஷிகா, ஜோஸ்னா, தேஜஸ்வினி, அபிக் ஷனா, ஆயுஷ்யா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 433, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதி யாத்திரையாகி கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**433, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**021 222 9450**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




## கிழக்குப் பல்கலைக்கழகம்







# 'உதயன்' ஏற்பாட்டில் நேற்றுக் குருதிக் கொடை முகாம்





















# பாகிஸ்தானில் கலவரத்தில் சிக்கி 10 பே

இஸ்லாமபாத், நவ. 28
பாகிஸ்தான் அமைச்சர் ஜாகித் ஹமீட், பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு நடத்தப்பட்ட போராட்டம் தற்போது கலவரமாக மாறியுள்ளது. இந்தக் கலவரத்தால் 10 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தேர்தலின் போது வேட்பாளர்கள் மத அடிப்
டையில் செய்து கொள்ள வேண்டிய திருத்த பிரமாணத்
சட்டத்துறை அமைச்சர் ஜாகித் ஹமீட் மேற்கொள்ளவில்லை
இதனால் அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்
தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த ஒரு வாரமாக தெக்ர

# அகுங் எரிமலை கடும் சீற்றம்

இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ள அகுங் எரிமலை, சிற்றமடையத் தொடங்கியதை அடுத்து அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ளது அகுங் எரிமலை. இந்த எரிமலை தற்போது சீற்றமடைய ஆரம்பித்துள்ளது. சுமார் 4 ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு கரும் புகை ஏழுந்துள்ளதால் பாலியினூடாக வானூர்திப் போக்குவரத்துக்கள் கைவிடப்பட்டுள்ளன. பாலியின் கிழக்கு பகுதியில் உள்ள லோம்போக் தீவில் இருக்கும் பன்னாட்டு வானூர்தி நிலையம் முழுமையாக மூடப்பட்டுள்ளது.
இந்தோனேஷியாவின் பேரிடர் மட்டுப்படுத்துதல் நிறுவனம், 'அகுங் எரிமலை சாம்பர் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது' என்று தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளது.
இந்தோனேசியாவில் தீவிர நிலையில் சுமார் 130 எரிமலைகள் உள்ளன. 1963ஆம் ஆண்டு, கடைசியாக அகுங் மலை வெடித்துச் சிதறியது. இதன்போது ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# மகுமெரியைக் கைப்பற்றியது போகோஹரம்

மைதுகுரி, நவ. 28
நைஜீரியா போர்னோ மாகாணத்தில் உள்ள மகுமெரி நகரை போகோஹரம் ஆயுததாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நைஜீரியாவில் இஸ்லாமிய மதத்தின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற நோக்கத்துடன் போகோஹரம் தீவிரவாத அமைப்பினர் 2002ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றனர்.
2009ஆம் ஆண்டு முதல் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை கையில் எடுத்துள்ளனர். மக்களைக் கடத்துவதும், படுகொலைகள் செய்வதும் அவர்களின் அன்றாட வழக்கமாகி விட்டது. சில நகரங்களைக் கைப்பற்றி அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டிலும் வைத்துள்ளனர்.
இந்த நிலையில் வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ மாகாணத்திற்கு உட்பட்ட மகுமெரி நகரை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





# ரஷ்யாவின்
# 34 பேர் சிரி

டமஸ்கஸ், நவ. 28
சிரியாவில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 34 பொதும
உயிரிழந்தனர். இது ஓர் இலக்குத் தவறிய தாக்குதல் என்று அறிவி
பட்டுள்ளது.
சிரியாவில் செயற்பட்டுவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்கு எதி
வும், சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராகவும் ர
செயற்பட்டு வருகிறது. சிரியாவின் வடகிழக்கில் உள்ள டெர் எஸர் பகுதி
மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே 34 அப்பாவிப் பொதுமக்கள் உ
ழுந்தனர். அவர்களில் 15 பேர் சிறுவர்கள். இது ஓர் இலக்குத் தவறிய
குதல் என்று லண்டனை தலைமையிடமாகக் கொண்டு சிரியாவில் செ
படும் போர் கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

# விசித்திரமான போராட்டம்தான்

மலேசியாவைச் சேர்ந்த செவ்ரோன் எண்ணெய் நிறுவன ஊழியர் அப்துல் ஹமீத் என்பவர், தனது கையில் பசையைத் தடவி, தரையில் பதித்து புதுமையான முறையில் போராட்டம் நடத்தி வருகிறார்.
இவர் குறித்த நிறுவனத்தில் 17 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்தார். கடந்த மே மாதம் திடீரென்று 30 நாள்களுக்குள் வேலையைவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்று அறிவிப்பு விடுக்கப்பட்டது. அதற்கான காரணத்தைக் கேட்டார் ஹமீத். ஆனால் நிர்வாகம் அவருக்குப் பதில் அளிக்கவில்லை.
'எண்ணெய் நிறுவனத்தில் தானியங்கி இயந்திரங்களை நிறுவி விட்டதால், மனிதர்களின் தேவை இல்லாமல் போய்விட்டது. ஒரு நிறுவனம் தனக்காக அர்ப்பணிப்புடன் 17 ஆண்டுகள் பணியாற்றிய ஊழியரை இப்படியா நடத்துவது? திடீரென்று வேலையை விட்டு நீக்கினால் அவரால் என்ன செய்யமுடியும்?' என்று கேட்கிறார் சமூக ஆர்வலர் முஹம்மது யூசுப் ஆஸ்மி.
தன்னை வேலையில் இருந்து நீக்கியதை எதிர்த்துப் போராட முடிவெடுத்தார் ஹமீத். கோலாலம்பூரில் உள்ள தலைமையகத்தில் உயர் அதிகாரிகளைச் சந்திக்க முயன்றார்.
ஆனால் முடியவில்லை. வேறுவழியின்றி அந்த அலுவலகத்திலேயே பசையைக் கையில் தடவி, தரையில் பதித்தபடி அமர்ந்துவிட்டார். வேலையில் இருந்து நீக்கி 175 நாட்களுக்கு மேலாகியும் இன்றும் நிர்வாகம் உரிய பதிலை அளிக்கவில்லை. ஹமீதும் இடத்தை விட்டு அகலவில்லை. (ம)





சுலோவேனியாவின் பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான 'நெருப்பு விழா' கொண்டாடப்பட்டது. பல்லாயிரக் கணக்
மக்கள் விழாவை நேரில் கண்டு ரசித்தனர். (ம

# 0 பேர் பரிதாபச் சாவு

ர் மத அடிப்ப
மாணத்தை
ளவில்லை.
வலியுறுத்தி
ாக தெக்ரிக்

இ லபாயிக் ரா ரசூல் அல்லா அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்லாமபாத்தின் இயல்பு நிலை முடங்கியுள்ளது. இந்தக் கலவரத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர். நிலமையைக் கட்டுப்படுத்த சுமார் 10 ஆயிரம் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். (ம)




# ன் தாக்குதலில் ரியாவில் சாவு

பொதுமக்கள்
று அறிவிக்கப்

வுக்கு எதிராக
கவும் ரஷ்யா
ஸர் பகுதியில்
மக்கள் உயிரி
தவறிய தாக்
பாவில் செயற்
(ம)



கணக்கான
(ம)



# சூரியனில் மிகப்பெரும் ஓட்டை

வொஷிங்டன், நவ. 28

சூரியனில் மிகப்பெரும் ஓட்டை ஏற்பட்டுள்ளது என்றும், அந்த ஓட்டையில் இருந்து வெளிவரும் வெப்பக் காற்றால் பூமிக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்றும் நாசா அறிவித்துள்ளது.

நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வு மையம், சூரியனின் மேற்பரப்பை கடந்த 8ஆம் திகதி ஒளிப்படம் எடுத்து ஆய்வு மேற்கொண்டது. அந்த ஒளிப்படத்தில், சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய ஓட்டை ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. அதன் வழியாக சூரிய வெப்பக் காற்று அதிவேகமாக வெளியேறி வருகிறது. சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெப்பக் காற்று வெளியேறுவது அடிக்கடி நிகழும் சாதாரண நிகழ்வு தான் என்றாலும், இந்த ஓட்டை வழியாக வழமைக்க மாறாக அதிவேகத்தில் சூரியக்காற்று வெளியேறி வருகிறது. இதனால் பூமிக்கு ஆபத்து உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரிய சுழற்சி காரணமாக இன்னும் சில ஓட்டைகள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன எனவும் விண்வெளி வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ம)

# எகிப்தில் தாக்குதல் 305 பேர் உயிரிழப்பு

> ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கெய்ரோ, நவ. 28

எகிப்து நாட்டின் வடக்கு சீனாய் பகுதியில் உள்ள மசூதியொன்றில் ஆயுததாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 305 பேர் உயிரிழந்த நிலையில், "எகிப்தில் உள்ள ஆயுததாரிகள் விரைவில் வேட்டையாடப்படுவார்கள்" என்று எகிப்தின் அதிபர் அல் சிசி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"தீவிரவாதிகளின் தாக்குதல் கோழைத்தனமானது. இதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம். தவறிழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. இராணுவத்தினரும், பொலிஸாரும் முழுப் பலத்துடன் தீவிரவாதிகளை வேட்டையாடுவார்கள். மிகக் குறுகிய காலத்தில் சினாய் பகுதியில் தீவிரவாதிகள் வேரறுக்கப்படுவார்கள்" என சிசி மேலும் தெரிவித்தார்.

தொழுகை நேரத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. எந்த ஆயுத குழுக்களும் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆணைக்குழுவுக்கு ஒரு சபாஷ்!

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளையும் முறியடித்து திட்டமிட்டது போன்றே எதிர்வரும் தை மாதத்தில் அரைவாசித் தேர்தலையாவது நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு பிடிவாதத்துடன் நடந்துகொண்டுள்ளது. 93 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடக்கவுள்ளது.

ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் மக்களின் அடிப்படை உரிமை, அதனை அரசியல்வாதிகள் தமது தேவைக்காக ஒத்திப்போடுவது ஏற்புடையது அல்ல என்ற நிலைப்பாட்டைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்திருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு, தனது கொள்கையை நிலைநிறுத்தும் வகையில் செயற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. தேர்தலைப் பின்போடுவதற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளையும் தாண்டி, அரசியல் நோக்கங்களுக்கு அடிபணியாது தேர்தலை நடத்துவதில் உள்ள தனது அர்ப்பணிப்பை அது உறுதிப்படுத்தியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே முனைப்புடன் இருப்பதான குற்றச்சாட்டு ஒன்றுண்டு. கட்சி மைத்திரி அணி மகிந்த அணி என்று இரண்டாகப் பிளவுபட்டுக் கிடப்பதால் இப்போது தேர்தலை எதிர்கொள்வது தமது கட்சிக்குப் பாதகமாகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாகவும் மாறிவிடும் என்கிற அச்சம் காரணமாகவே சுதந்திரக் கட்சி இத்தகைய நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

மைத்திரி, மகிந்த அணிகளுக்கு இடையிலான பேச்சுக்கள் ஓர் இணக்கத்தை எட்டும் வரைக்கும் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரும் சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகருமான பைசர் முஸ்தபாவின் திட்டத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவும் புரிந்துகொண்டிருந்ததால், அதற்கு இடமளிப்பதில்லை என்பதில் அது உறுதியோடு நடந்துகொண்டுள்ளது. எனவேதான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கோடு தொடர்புபட்டுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் சிறு சிக்கல்கள் கொண்ட சபைகள் தவிர்ந்த 93 சபைகளின் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் 336 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினால் அவற்றில் 203 சபைகளுக்கு தேர்தலை நடத்த முடியாத நிலை தோன்றியிருந்தது. எஞ்சிய 133 சபைகளில்கூட 40 சபைகளுக்கு தேர்தலை நடத்துவதில் சிறு தடங்கல் இருக்கிறது.

தொகுதி வாரியான தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், உள்ளூராட்சி சபைகள் மற்றும் தொகுதிகள் தொடர்பில் 2016ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் சில தொகுதிகளின் பெயர்கள் தவறாக அச்சிடப்பட்டமை போன்ற சிறு சிக்கல் காரணமாக இந்த 40 சபைகளினதும் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டியுள்ளது. உள்ளூராட்சி அமைச்சே இந்தத் திருத்தங்களை உடனடியாகச் செய்ய முடியும். அப்படித் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துவிட்டால் 133 சபைகளுக்குமே கூட தேர்தலை நடத்திவிட முடியும்.

ஆனால், தேர்தலைப் பிற்போடுவதற்கு இதன் மூலமும் ஏதாவது தில்லுமுல்லுகள் அரங்கேற்றப்படுமோ என்கிற அச்சம் காரணமாக, இந்த 40 சபைகளின் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படும் வரை காத்திருக்கக் கூட தேர்தல்கள் ஆணைக்குழு மறுத்துவிட்டது. அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலுக்குக் காத்திருக்காமல் 93 சபைகளுக்கும் மட்டும் தேர்தலை அறிவித்திருக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு.

மாற்றம், நல்லாட்சி, நேர்மையான அரசியல் என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், அவரது கட்சிக்கும், கூட்டு அரசுக்கும் இதை விட வேறு அவமானம் இருக்கமுடியாது. முழக்கங்கள் எல்லாவற்றுக்கும் மாறாகவே இந்த ஆட்சியில் செயல்கள் அரங்கேறுகின்றன என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு பறைசாற்றியுள்ளது.

# தனிவழி செல்கின்ற முடிவு மீள்பரிசீலனைக்குரியது

இந்துமதி



புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான தேர்தலில் இளைஞர் சமூகம் ஒன்றிணைந்து ஒரு சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. அரசியல்வாதிகள் மீதான வெறுப்புக் காரணமாகவே அவர்கள் இத்தகையதொரு முடிவை எடுத்ததாகவும் தெரிகின்றது.

போர் ஓய்ந்த நிலையிலும் தமிழர்களின் வாழ்க்கையில் நிம்மதி ஏற்படவில்லை. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர்கள் தமது காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்ற போரில் பல ஆயிரக் கணக்கான தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டன. உயிர்களை இழந்தவர்களில் அதிகமானவர்கள் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### விரக்தி நிலையில் தமிழ் இளைஞர் சமூகம்

போர் ஓய்ந்து புதிய ஆட்சி பதவிக்கு வந்துள்ள போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. இளைஞர்கள் வேலை கிடைக்காத நிலையில் விரக்தியுடன் காணப்படுகின்றனர். இளைஞர்கள் சிலர் வன்செயல்களில் ஈடுபடுவதற்கு இதுவுமொரு காரணமாகும்.

இந்தநிலையில்தான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான தேர்தலில் சுயேச்சைக் குழுவாகத் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

எமது அரசியல்வாதிகளுக்கும் சில பொறுப்புக்கள் உள்ளதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. முதலில் இளைஞர்களது மனநிலையை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். அவர்களுக்கு அதிக வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும். இடம்பெறப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இதற்கொரு ஆரம்பமாகக் கொள்ள முடியும். பழைய முகங்களை மீண்டும் மீண்டும் வேட்பாளர்களாக நிறுத்துவதைத் தவிர்த்து திறமையும் ஆர்வமும் உள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இதன் மூலமாக இளைஞர்கள் அரசியலிலும் நிர்வாகத்திலும் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது அரசியல் தலைவர்களாக உள்ளவர்களும் ஒரு காலத்தில் இளைஞர்களாக இருந்தவர்கள்தான் என்பதை எவருமே மறந்துவிடக்கூடாது. இன்றைய இளைஞர்களை நாளைய தலைவர்களாக மாற்றவேண்டிய பொறுப்பு மூத்த அரசியல்வாதிகள் வசமே உள்ளது.

இளைஞர்களும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் முடிவுகளை எடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அறிவு பூர்வமான சிந்தனைகள்தான் ஆக்கத்தைத் தரும் என்பதையும் இவர்கள் மறந்துவிடக்கூடாது.

வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஏற்கனவே பல அணிகள் களத்தில் இறங்கியுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதில் சிலர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாகத் தமிழ் மக்கள் பேரவையினர் தமது கொள்கைகளை வீசி எறிந்துவிட்டு கூட்டமைப்புக்கு எதிராகக் களத்தில் இறங்கியுள்ளதையும் காண முடிகின்றது. அரசியல் கலப்பில்லாதவர்களாக ஆரம்பத்தில் தம்மைக்காட்டிக்கொண்ட இவர்கள் தற்போது தீவிர அரசியலுக்குள் இறங்கியதையும் பார்க்க முடிகின்றது. இத்தகையதொரு நிலையில் இளைஞர்கள் தேர்தல் களத்தில் தனியாக இறங்குவது ஆரோக்கியமானதல்ல. மேலும் இந்த முடிவு தமிழர்களின் ஒற்றுமையை மேலும் சிதைத்துவிடும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

### போராட்டங்களால் சலித்துப் போயுள்ள தமிழ் மக்கள்

சாத்வீகமான அரசியல் போராட்டம் தமிழர்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுத் தராததால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினர். இதில் ஒரு நியாயமும் இருந்தது. ஆரம்பத்தில் சில வெற்றிகளும் கிடைத்தன. ஆனால் இறுதியில் எல்லாமே பொய்த்துவிட்டன. தமிழர்கள் மீள முடியாத அவலத்தினுள் தள்ளப்பட்டுவிட்டனர்.

எதிர்காலத்தில் போராட்டங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் மக்களின் ஆதரவு இதற்குக் கிடைக்கப் போவதில்லை. அந்த அளவுக்கு அவர்கள் சலித்துப் போய்விட்டனர். இழப்புக்கள் தந்த வேதனை இன்னமும் அவர்களை விட்டு அகலவில்லை. இதனால் போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்ட முடியாத நிலை உருவாகியுள்ளது.

> இழப்புக்கள் தந்த வேதனை இன்னமும் அவர்களை விட்டு அகலவில்லை. இதனால் போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்ட முடியாத நிலை உருவாகியுள்ளது.


### தனிவழி செல்லும் இளைஞர்களது முடிவு நியாயமானதல்ல

தமது அரசியல்வாதிகள் மீது தமிழ் இளைஞர்கள் வெறுப்புக்கொள்வதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. ஏனென்றால் தாம் வழங்கிய வாக்குறுதிகளை அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியவில்லை. தற்போது நாட்டில் காணப்படுகின்ற அரசியல் சூழ்நிலையில் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

எனவே இளைஞர்கள் மக்களின் செல்வாக்குப் பெற்ற, மக்களோடு நிற்கின்றவர்களுக்குத் தமது ஆதரவை வழங்கி ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இதேவேளை அவர்கள் மூலமாகத் தமது அபிலாசைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். தமது சக்தியை வெளிப்படுத்தி சந்தர்ப்பவாதிகளுக்குத் தேர்தலில் ஒருபாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

ஆகவே தனிவழி செல்கின்ற தமது முடிவிலிருந்து இளைஞர்கள் விலகிக்கொள்ள வேண்டும். தனிவழிசெல்கின்ற முடிவினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை ஆராய்ந்து பார்க்கும்போது நல்லதொரு தெளிவு இவர்களுக்குக் கிடைக்கும்.





# கூட்டமைப்பின் பொறுமைக்கும் எல்லையுண்டு

சேரலாதன்

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் கூட்டாட்சி அரசு 93 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளமை அதன் பலத்தை எடுத்துக் காட்டியுள்ளது.

அரசுடன் இணைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி ஆகிய தமிழ்க்கட்சிகள்வாக்கெடுப்புக்குஆதரவாக வாக்களித்திருந்தன. மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியுடன் ஜே.வி.பி மட்டுமே இணைந்து எதிராக வாக்களித்தது. ஜே.வி.பியின் இந்த நிலைப்பாட்டை மகிந்தவுக்கு ஆதரவானதொரு நிலைப்பாடாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மாறாக அரசுக்கு எதிரானதொரு செயற்பாடாகவே கருத வேண்டும்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இம்முறையும்வரவுசெலவுத்திட்டவாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இதற்கான சூழ்நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். அரசுக்கு விடுத்துள்ளநல்லெண்ணச்சமிக்ஞையாகவே இதைப் பார்க்க வேண்டும்.

### முதன்மைத் தமிழ்க் கட்சிகள் அரசைக் கைவிட மாட்டா என்பது நிரூபணம்

கூட்டு அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு கூட்டு எதிரணியினர் எதைச் செய்வதற்கும் தயாராகவுள்ள இன்றைய நிலையில், வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசுபெரும்வெற்றியீட்டியுள்ளமை முக்கியமானதொருதிருப்பத்தைஏற்படுத்திவிட்டது. முக்கியமானவேளையில் முதன்மைத் தமிழ்க்கட்சிகள் அரசைக் கைவிடமாட்டா என்பதும் இதன்மூலம்நிரூபிக்கப்பட்டுவிட்டது.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் சூடுபிடித்துக் காணப்படுகின்றன. மகிந்த தரப்பினர் இதை முற்றாகவே நிராகரித்து விட்டனர். இது நிறைவேற்றப்பட்டால்நாடுபிளவடைந்து போய் விடுமென இவர்கள் கூறியுள்ளனர். மகிந்த ராஜபக்ச, கூட்டு அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கானதொரு துருப்புச் சீட்டாகவே இதைக் கருதுகிறார். ஆனால் தேவையான ஆதரவைத் திரட்டுவதற்கு இதுவரை அவரால் முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களின்பிரச்சினைக்குத்தீர்வுகிடைக்குமென நம்புகின்றது. மக்களிடம் இதையே திரும்பத் திரும்ப கூறி வருகின்றது. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் இதை மறுப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் உள்ளனர். புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு விடக் கூடாது என்பது இவர்களது பிரார்த்தனையாகவும் உள்ளது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும் கூட்டமைப்பு வழங்கிய ஆதரவை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதில் மனப்பூர்வமாகவும் அதிக ஈடுபாட்டுடனும் செயற்பட வேண்டும். வெறும் சாக்குபோக்கைக்கூறுவதால்எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

### தமிழ் மக்களது முக்கிய பிரச்சினைகள் குறித்து அரச தலைவரின் அசிரத்தைப் போக்கு

அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரச தலைவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலளிக்கும் விதத்தில் பதில் கூறவில்லை என்றே கூற வேண்டும். கடந்த காலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளுக்கும் தற்போதைய அரசுதான் பதில் கூற வேண்டும். பிரச்சினைகளுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து உரியதண்டனையைவழங்கவேண்டும்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுகின்றன. ஆறுமுகம் தொண்டமான் மதில் மேல் பூனை போன்றதொரு நிலையில் காணப்படுகின்றார். இவர் வசதிக்கேற்றவாறு மகிந்த பக்கமும் தாவக் கூடியவர். இதைப்போன்றுதான் ஈ.பி.டி.பியின் தலைவரின் நிலையும் காணப்படுகின்றது. எது எப்படியிருந்த போதிலும் இவர்கள் அரசுக்கு ஆதரவு வழங்கியதைப் பாராட்டியே ஆக வேண்டும்.

### தனது பலத்தை நிரூபிக்க வேண்டிய நிலையில் அரசு


நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் அரசு தனது பலத்தை நிரூபிக்க வேண்டிய நிலையில் உள்ளது. இதில் வெற்றி பெற்று விட்டால் மகிந்த தரப்பினர்கள் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டிய நிலை உருவாகி விடும். இதற்கு மாறாக அரசு தோல்வியைத் தழுவினால் எதிரணியினர் பலம்பெற்று விடுவார்கள். அடுத்து ஆட்சியைக்கலைப்பதற்கானவேலைகளிலும் ஈடுபட முனைவார்கள்.

தமிழர் பகுதியைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பு வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டபோதிலும் சில எதிர்ப்புக்களையும் சந்திக்க நேரிடும். மக்கள்தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப்பெற்றுத்தரத்தவறிவிட்டதாகக் கூட்டமைப்பைக் குறை கூறுகின்றனர். எதிரணியினர் இதையேகாரணமாகக்காட்டிகூட்டமைப்புக்கு எதிராக மக்களைக் தூண்டி விடுகின்றனர். இதில் கூட்டமைப்புக்கு உதவ வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது. புதிய அரசமைப்பை எப்பாடுபட்டாவது அரசு நிறைவேற்றியே தீர வேண்டும்.

> தமிழர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதில் இனியும் காலத்தை வீணாக்கக் கூடாது. தமிழர்களும் இந்த நாட்டின் பிரசைகளே என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டு அவர்களும் நிம்மதியாக வாழ்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இவையெல்லாம் நிறைவேற்றப் படாத விடத்து கூட்டமைப்பு தொடர்ந்து அரசுக்கு ஆதரவை வழங்குவது அர்த்தமற்றதாகி விடும்.



தமிழர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதில் இனியும் காலத்தை வீணாக்கக் கூடாது. தமிழர்களும் இந்த நாட்டின் பிரசைகளே என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவர்களும் நிம்மதியாக வாழ்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். இவையெல்லாம் நிறைவேற்றப்படாதவிடத்து கூட்டமைப்பு தொடர்ந்து அரசுக்கு ஆதரவைவழங்குவது அர்த்தமற்றதாகி விடும். மக்களும் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.



## ஆசிரியருக்கான கடிதம்

### இவர்கள்தான் நாளைய தலைவர்களா?

சிலதினங்களுக்குமுன்னர்யாழ்.நகரிலிருந்து வசாவிளானுக்குச்செல்லும்மினிபஸ்ஒன்றில் பலாலி வீதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்தேன். குறித்த மினிபஸ்ஸில் சன நெரிசல் அதிகமாக இருந்தது. மினி பஸ்ஸினுள் பயணித்த ஐந்து இளைஞர்கள் அட்டகாசமாக உரத்துப் பேசி மற்றவர்களது கவனத்தைக் கவரும் விதத்தில் நடந்துகொண்டனர். அவர்கள்பல்கலைக்கழகத்தில்கற்கும்மாணவர்கள் என்பதை அவர்களின் உரையாடல்களில் இருந்துபுரிந்துகொண்டேன். மினிபஸ்பரமேஸ்வராசந்தியடியில்நின்றது. குறித்தஅந்தஐந்து இளைஞர்களும் முண்டியடித்துக் கொண்டு மினி பஸ்ஸிலிருந்து இறங்கி தம்போக்கில் செல்ல ஆரம்பித்தனர். மினிபஸ் நடத்துநர் "தம்பி... தம்பி, நீங்கள்காசுதரவில்லை" என்று கூறியவாறே அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார். அவர்கள் ஐந்துபேரும் திரும்பிப் பார்த்து நமுட்டுச் சிரிப்போடு "நீ காசு கொடுக்கவில்லையா?" என்று ஒருவரை ஒருவர் கேட்டு நாடகமாடினர். அவர்கள் தம்மை ஏமாற்றுவது தெரிந்து நடத்துநர் கடுப்பானார். அவரும் விடவில்லை. இறுதியில் ஒருவாறு அவர்களிடமிருந்துபணத்தைப்பெற்றுக்கொண்டேமீண்டும் மினிபஸ்ஸில் ஏறினார். தாம் பயணம் செய்தமைக்கானகட்டணத்தைச்செலுத்தவேண்டும் என்ற நேர்மை உணர்வு இவர்களிடம் சிறிதேனும் இருக்கவில்லை. வேண்டுமென்றே இத்தகைய குளறுபடி நடவடிக்கைகளை மேற்கொண்டு மற்றவர்களை மடையர்களாக்க எத்தனிக்கும் இத்தகையோரது போக்கு சரியானது தானா? அல்லது குடும்பங்கள், பாடசாலைகள், சமூகநிறுவனங்கள், பல்கலைக்கழகம்போன்றவைசிறந்தவிழுமியங்களைவழங்கத்தவறிவிட்டனவா? ஏற்கனவே நேர்மையற்ற புத்திஜீவிகளால் சமூகம் அல்லாடிக் கொண்டு இருக்கிறது. இந்தநிலையில்இவர்கள்பட்டம்பெற்று, பதவி பெற்று, நிர்வாக அதிகாரிகளானால் எவ்வாறு மக்களுடன் நடந்துகொள்வார்கள்? இத்தகையோர்அரசியலில்இறங்கினால்நாடு எப்படி உருப்படும்? இந்த நிலைமையை எப்படிப் மாற்றப் போகிறோம்? என்பதை எண்ண மனது கனக்கிறது.

ஆனால்ஒன்று; வயதுக்கோளாறுகாரணமாக இத்தகைய கோணங்கித்தனங்களில் ஈடுபடுவோர் சிலவேளைகளில் தப்பித் தவறி கடும்போக்குக்கொண்டவர்களிடம்எக்கச்சக்கமாக மாட்டிக்கொள்வதுமுண்டு. அத்தகையசந்தர்ப்பங்களில்கிடைக்கும்தர்மஅடிகள் இவர்களால் வாழ்க்கையில் மறக்க இயலாதவையாக அமைந்து விடுவதுமுண்டு. அந்த வகையில் இன்றைய வாழ்க்கைச்சூழலில் 'கெஞ்சினால் மிஞ்சுவர்; மிஞ்சினால் கெஞ்சுவர்' என்ற எமது மூத்தோர்வார்த்தைதான் இத்தகையநியாயம் நீதியற்ற, கோணங்கித்தனமான செயற்பாடுகளுக்குப் பொருத்தமானது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இ.தயாளன்,
கேணியடி,
குப்பிளான்.



# விருது வழங்கல் நிகழ்வு

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன வட பிராந்திய வெற்றியாளர்களுக்கு அதி உயர் விருது வழங்கி மதிப்புறுத்தும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொது முகாமையாளர் ரொஷான் கொலாஸ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன் மற்றும் கிளை முகாமையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஒ)

# புதிய கணக்காய்வு சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பு

## அமைச்சரவை உபகுழுவின் தலைவர் கருத்து

திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட புதிய கணக்காய்வு சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலைக் கணக்காய்வு சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவர் சரத் அமுனுகம வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், "சில திருத்தங்களோடு இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, நட்டங்கள் ஏற்படும் போது அவற்றை அறவிடுவதற்குரிய அதிகாரம் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் அல்லது வர்த்தகச் செயற்றிட்டங்களின் போது நட்டங்கள் ஏற்படின் அது தொடர்பில் கணக்காய்வுச் செயற்பாடு இடம்பெறும். விசாரணைகள் முடிவடைந்ததும் அந்த நட்டத்தை மீள அறவிடுவதற்குரிய அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு புதிய திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனுமொரு வகையில் அமைச்சின் செயலாளருக்கும் குற்றங்களுடன் தொடர்பிருப்பின், அரச தலைவர் அது குறித்துப் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு வாய்ப்புள்ளது. அதேவேளை, திருத்தங்களின் பின்னர் மீண்டும் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்." - என்றார்.

தவிர கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க இது தொடர்பில் கூறும் போது, 22 ஆவது தடவையாகவும் கணக்காய்வு சட்டமூலத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு சட்டமூலம் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஒ)

# பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு முழுமையான ஆதரவு


## ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் தெரிவிப்பு


இலங்கையில் இடம்பெறும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முழுமையான ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் வென்சாய் சங் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெறவுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென 5 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடு உடைய நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையுடன் கூட்டிணைந்து, கடந்த 50 வருடங்களாக மேற்கொண்ட கூட்டுறவான நடவடிக்கைகளை நினைவுகூரும் விதமாக நூல் பிரதி ஒன்றும் அரச தலைவரிடம் பரிமாறிக்கொள்ளப்பட்டது. (ஒ)





CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

24/11/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -42.43 | 6,413.68 | 6,456.11 |
| S&P SL20 | -19.27 | 3,733.10 | 3,752.37 |
| வியாபாரப்புரள்வு | | 596,368,510 | 1,490,369,410 |
| உள்நாடு:- கொள்வனவு | | 469,579,200 | 1,453,346,690 |
| விற்பனை | | 352,062,176 | 226,867,344 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 126,789,272 | 37,022,712 |
| விற்பனை | | 244,306,304 | 1,263,501,950 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 345.8 | 409,026 | 133,695,773.60 |
| ஹறாகில்ஸ் | CARG.N | 204 | 495,070 | 100,994,335.90 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 1625 | 57,847 | 93,954,207.30 |
| நமுனுகுல பிளான்ரேசன்ஸ் | NAMU.N | 90 | 617,427 | 55,568,225.80 |
| வட்டவல பிளான்ரேசன்ஸ் | WATA.N | 29 | 1,020,925 | 29,606,012.50 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 153.8 | 177,028 | 27,205,564.20 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 255 | 81,002 | 20,655,471.80 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 137.2 | 108,785 | 14,560,776.20 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 118.4 | 79,187 | 9,240,791.90 |
| ரேணுகா புட் | COCO.N | 18.5 | 424,225 | 7,913,929.30 |

அறிவித்தல்கள் -

Seminar on Budget 2018 - 25th Nov @ 9.00am
info - whatsapp 0777822014

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 227 |
| விலை உழைப்பு | 10.64 |
| புத்தகப்பெறுமதி | 1.34 |
| பங்குலாப விளைவு | 3.06 |

# முருங்கை பயிர்ச்செய்கை

ல.கிர்த்திகா

பொதுப்பெயர் - முருங்கை
தாவரவியல் பெயர் - moringa oleifera
குடும்பம் - Moringaceae

**முக்கியத்துவம்**

- வறட்சியைத் தாங்கி வளரும் பயிர்
- ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 220 - 240 காய்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- இலை, காய், பூ என்பன உணவு மற்றும் மருத்துவத் தேவைக்காகப் பயன்படுத்தப் படுகிறது.
- மருத்துவ முக்கியத்துவம் மிக்கது. நீரிழிவு மற்றும் குருதிச்சோகை நோய்க்கு சிறந்த நிவாரணியாகும்.
- கல்சியம் முதன்மையாகவும் இரும்பு, மக்னீசியம், பொஸ்பரஸ் என்பன முறையே அதிகளவிலும் காணப்படுகிறது.



**வர்க்கங்கள்**

- PKM -1
- PKM-2
- உள்ளூர் இனம்

**தேவையான சூழல் காரணிகள்**

- வருடாந்த மழைவீழ்ச்சி 250 - 3,000 மி.மீ பரவலான மழைவீழ்ச்சி.
- நன்கு நீர் வடியும். இருவாட்டி மண் மற்றும் மணல் மண் சிறந்தது.
- மண் PH 5-9 ஆக இருத்தல் விரும்பத்தக்கது.
- கடல் மட்டத்திலிருந்து 2ஆயிரம் மீற்றர் வரையான பிரதேசம்.

**இனப்பெருக்க முறை**

- விதை மற்றும் தண்டுத்துண்டம் மூலம் இனம் பெருக்க முடியும்.
- வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு விதை மூலம் இனம்பெருக்கம் செய்தல் இலகுவானது.
- தண்டுத் துண்டம் எனின் ஒரு மீற்றர் நீளமுடைய 4 செ.மீ விட்டமுடைய தண்டுத் துண்டங்கள் நடுகைக்குப் பொருத்தமானவை.

''காற்றில்லாமல் உயிர்களில்லை,
கரைகளில்லாமல் நதிகளில்லை,
மரங்களில்லாமல் மனிதன் இல்லை''

**நடுகை முறை**

- சிறுபோக, பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.
- நடுகை இடைவெளி 8 அடி x 8 அடி.
- இலை உற்பத்திக்காயின் நடுகை இடைவெளி 4அடி x 4 அடி.
- நடுகைக்குழி ஆழம் 1 - 1.5 அடி நீள அகல ஆழத்தில் அமைத்தல் வேண்டும்.
- சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப்பப்பட வேண்டும்.

**அறுவடை**

- 8 மாதங்களின் பின் முதலாம் அறுவடையைப் பெற்றுக்கொள்ளலாம்
- மூன்றாவது வருடத்தில் கூடிய விளைச்



சலைப் பெறலாம்.

- சிறந்த உற்பத்தியைப் பெற வருடாந்தம் அறுவடை முடிவுற்ற பின் 3 - 4' உயரத்தில் கத்தரித்தல் சிறப்பானது.
- வருடத்தில் இரு தடவை அறுவடையை பெற்றுக் கொள்ளலாம்.

மார்ச் தொடக்கம் ஏப்ரல் காலப்பகுதி.
ஜூலை முதல் செப்ரம்பர்.

# ஆரோக்கிய வாழ்வுக்கு நெல்லி

சௌந்தரநாயகம் தயாளசீலன்

தழிழ் பெயர் - பெரு நெல்லி
பொதுப்பெயர் - நெல்லி ( Amla)
தாவரவியற்பெயர் : Phyllanthu emblica L (பைலாந்தஸ் எம்பிலிகா)
குடும்பம் :- Euphorbioceae

நெல்லி அயன மண்டல வலயங்களில் காணப்படும் தாவரமாகும். இதன் பூர்வீகம் நேபாளத்தின் இமாலயப் பிரதேசங்கள். இந்தியாவின் வடபிரதேசங்களோடு தெற்கு வரையிலும் இந்து சமுத்திர நாடுகளிலும் பரவலடைந்து காணப்படுகின்றது. இலங்கையில் உலர் இடைவலயங்களிலும் விசேடமாக பதுளை,மொனராகலை,கல்ஓயா,புத்தளம், அனுராதபுரம், இரத்தினபுரி,பொலனறுவை, வவுனியா போன்ற பிரதேசங்களில் வனாந்தரங்களில் இயற்கையாக வளர்ந்திருப்பதைக் காணலாம்.
நெல்லிக்காய் விற்றமின் 'சி' அதிகமாகக் கொண்ட பழம் ஆகும். நெல்லி தாவரத்தின் சகல பகுதிகளும் மருத்துவக் குணம் கொண்டதோடு போசனை மிக்கதாகும். இது கசப்பு, இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு போன்ற ஐந்து சுவைகளையும் கொண்டுள்ளது. இப்பழத்திலிருந்து பல்வேறு உற்பத்திகளை தயாரிக்கமுடியும்.
நெல்லி பயிர் செய்வதற்கு இலகுவானதொரு பயிராகும். இது குறைந்த பராமரிப்பின் கீழ் நன்கு வளரும். இலங்கையில் வீட்டுத்தோட்டப் பயிராகப் பயிரிடப்படுவதோடு இதன் பழம் சந்தையில் வருடம் முழுவதும் கிடைக்கிறது.

**இனப்பெருக்கம்**

விதைகள் மூலம் இனப்பெருக்கமடையும் போது வித்தியாசமான இயல்புகளைக் கொண்ட நாற்றுக்கள் பெறப்படுகின்றன. எனவே ஒட்டுதல், வேர்த் துண்டங்களை முளைக்க வைத்தல் மூலம் உயர்தர இயல்புகளைக் கொண்ட நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நடுகை**

நாற்றுக்களை 6-7 மீற்றர் இடைவெளியில் மழை காலம் ஆரம்பமானதுடன் நடலாம். ஏக்கர் ஒன்றுக்கு 110 நாற்றுக்கள் போதுமானது.

**போசணைப் பெறுமானம்**

100 கிராம் நெல்லி சதைப்பகுதியில் அடங்கியுள்ள போசணைக் கூறுகளும் அதன் பெறுமானங்களும்.

| இல | போசணைக் கூறுகள் | போசணைப் பெறுமானங்கள் (கிராம்) |
|---|---|---|
| 1 | சக்தி | 58 கலோரி |
| 2 | நீர் | 81.3 கிராம் |
| 3 | புரதம் | 0.5 கிராம் |
| 4 | கொழுப்பு | 0.1 கிராம் |
| 5 | காபோவைதரேற் | 13.7 கிராம் |
| 6 | நார் | 3.4 கிராம் |
| 7 | கனிப்பொருள் | 0.7. கிராம் |
| 8 | கல்சியம் | 50 மில்லி கிராம் |
| 9 | பொஸ்பரசு | 20 மில்லி கிராம் |
| 10 | இரும்பு | 1.2 மில்லி கிராம் |
| 11 | விற்றமின் 'ஏ' | 4 மைக்ரோ.கிராம் |
| 12 | தயமின் | 30 மைக்ரோ.கிராம் |
| 13 | ரைபோபிளவின் | 10 மைக்ரோ.கிராம் |
| 14 | நியசின் | 0.2 மில்லி கிராம் |
| 15 | விற்றமின் 'சி' | 200-1800 மில்லி கிராம் |



**பயன்பாடு**

- பழத்திலிருந்து நெல்லி அச்சாறு, கோடியல், பழப்பானம் என்பவற்றைத் தயாரிக்கலாம்.
- இலைகளை கால்நடைகளுக்குத் தீவனமாகவும், சேதனப்பசளையாகவும் பயன்படுத்தலாம்.
- நெல்லிக்காயிலிருந்து எழுதும் மை,சாயப் பொடி என்பவற்றைத் தயாரிக்கலாம்.
- நெல்லியின் மரத் துண்டுகளை கலங்கிய தண்ணீரில் போட்டு வைத்தால் தண்ணீர் தெளிந்து விடும்.
- காயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெய் முடிவளர்வதற்கு உதவுவதோடு நறுமணமும் தரும்.

உண்ணக் கனி, ஒதுங்க நிழல்,
உடலுக்கு மருந்து, உணவுக்கு
விருந்து, அடைய குடில்,
அடைக்க கதவு, அழகு வேலி,
ஆட தூலி, தடவ தைலம்,
தாளிக்க எண்ணை எழுத
காகிதம், எரிக்க விறகு மரம்
தான் மரம் தான் எல்லாம் மரம்
தான் மறந்தான் மறந்தான்
மனிதன் மறந்தான்



**தினம் ஒரு நெல்லிக்காய் உண்பதால் கிடைக்கும் நன்மைகள்**

- புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும்.
- அல்சரைக் குணப்படுத்தும்.
- உடல் எடையைக் குறைக்க உதவும்.
- மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுக்கும்.
- உயர் குருதி அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும்.
- பார்வை மேம்படும்.
- நீரிழிவைத் தடுக்கும்.
- கல்லீரலின் சீரான செயற்பாட்டுக்கு உதவும்.
- மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கும்.

# விழித்தெழுவோம்





"பாலு நானும் நீயும் எவ்வளவு ஒற்றுமையானவர்கள். நீ என்னில் காட்டும் அன்புக்கு எல்லையில்லை. என் ஏழ்மைக்குக் கைகொடுக்கிறாய்; என் திறமைக்கு உற்சாகம் தருகின்றாய். என் தேவைகளுக்கு உதவுகிறாய். சில வேளைகளில் உன்னை நினைக்கையில் என் தாய் செய்வதிலும் நீ மேலாக எனக்குச் செய்வதாக உணர்கிறேன்" என்றார் ரகு. "அப்படி ஒரு போதும் சொல்லாதே! உன் தாயிடம் உன் தேவைகளை நிறைவேற்ற பெரிய மனம் இருக்கும். ஆனால் கொடுப்பதற்குப் பணம் இருக்காது. அதனால் தான் தாயைப் பார்க்கிலும் நான் அதிகம் செய்வதாக உனக்குத் தோன்றுகிறது. "இல்லை பாலு என் அண்ணன் தன்னுடைய பேனாவை நான் எடுத்தால் கூட உடனே பறித்திடுவான். அடித்திடுவான். நீ எனக்குப் பேனை கூட வாங்கித் தாறியே" "ரகு உன் அண்ணனிடம் பணம் இருந்தால் என்னைப் போல உதவுவார். தன் தேவைக்கு அம்மாவிடம் கேட்டு பணம் வாங்க முடியாததாலேயே அவர் அப்படிச் செய்கிறார். அதனால் அவனிடம் அன்பு இல்லை என்று மட்டும் கூறி விடாதே! ரகு. எனக்கு இப்போது ஒரு பயம் வருகிறது. நீ நான் உனக்குச் செய்யும் உதவிகளால் உன் அம்மா. அண்ணா எல்லோரையும் வெறுத்து விடுவாய் போலத் தெரிகிறது" என்றான் பதிலுக்கு பாலு. "பாலு நீ எனக்குச் செய்யும் உதவிகளிலும் பார்க்க உன் வார்த்தைகளுக்கு நான் கட்டுபட்டவன். நீ என் தாய் நிலையையும் என் அண்ணன் நிலையையும் எடுத்துக்கூறினாய். நான் படிப்பில் கெட்டிக்காரனாயிலும் உன்னிடமுள்ள அறிவு பெரியது. இனிமேல் என்தாய் சகோதரனுடன் அடம்பிடிக்காமல் இணைந்து நடப்பேன்" இப்படி கூறியபடி இருவரும் வகுப்பறைக்குள் நுழைகின்றனர்.


அப்போது ஆசிரியர் வகுப்பை சுவாரசியமாக ஆரம்பித்தார். "கடவுள் ஒருவன் இருக்கிறார். அவரை நாம் எப்படிக் காணலாம்? என ஒவ்வொருவரையும் தனித்தனியே கேட்டார். கடவுள் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார். கோயிலில் இருப்பார். வீட்டு பூசை அறையிலும் இருப்பார், பிள்ளையார், சிவன், முருகன் அம்மன் வடிவிலும் இருப்பார்" என்று பதில்கள் பல வந்தன. பாலு "சேர் நம்பிக்கை வைத்து கல்லையும் பார்த்தால் அது தெய்வத்தின் சாட்சி" என்று ஒரு பாடல் கூட இருக்கிறதே" என்றான். "நீங்களே சிந்தியுங்கள்" என்றார் ஆசிரியர். சேர் பேசமுடியாத ஒரு உருவத்திடம் நாம் பேசி வரம் கேட்பதிலும் அன்பு, கருணை, பணிவு, அடக்கம் என்பவற்றில் தான் கடவுள் உள்ளார் என்று எல்லா மதங்களும் போதிக்கின்றனவே அதில் உண்மை உண்டா" என்றான் ரகு. மீண்டும் "நீங்களே சிந்தியுங்கள்; என்றார் ஆசிரியர். "சேர் கஷ்டப் பட்டவனுக்கு உதவுதல், முதியோருக்கு உதவுதல், நோயாளிக்கு உதவுதல், சிறுவர்களைப் பேணுதல் போன்ற பணிகள் மூலம் அவர்கள் அடைகின்ற திருப்தியில் தான் கடவுள் இருக்கிறார் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். அது உண்மையா" என்றான் பாலு. "ஓம் சார் அன்று ஒருநாள் வயோதிபர் ஒருவர் வீதியைக் கடக்க முடியாமல் தத்தளித்தார். அவருக்கு கண் சரியாகத் தெரியாது போல இருந்தது. "தாத்தா எங்கே போகிறீர்கள்" என்றேன். "அந்தப் பக்கமுள்ள ஒழுங்கையில்தான் என்வீடு. உந்தக் காருகள், லொறிகள் இரஞ்சு கொண்டு அடிக்கடி வருகுது. கண்ணும் சரியாகத் தெரியவில்லை. காலையும் சரியாய் எடுத்து வைக்க முடியல்லைத் தம்பி" என்றார். நான் அவரின் கையைப் பிடித்து வீதியின் மறுபக்கம் கொண்டு போய்விட்டேன். அவரின் ஒழுங்கை வரை சென்று பாதையைக் காட்டிவிட்டு வந்தேன். அப்போது அவர் "என்ராசா நீ யார் பெத்தை பிள்ளையோ? உன்னைப் பெற அவர்கள் என்ன தவம் செய்தனரோ ராசா நீ கடவுள். என் கண்கண்ட கடவுள். நீ நல்லாய் இருப்பாய். என்றார் சேர். அப்பிடி எண்டாசேர் அவருக்கு நான் செய்த உதவியில் தானே கடவுள் இருக்க வேண்டும்" என்றார் ரகு. "ரகுதான் சரியாகச் சொன்னான். பிறருக்கு நாம் செய்யும் உதவிகளிலேயே கடவுள் இருக்கிறார். ஆதலால் தான் அந்தப் பெரியவருக்கு ரகு கடவுளாகத் தெரிந்தான்" என்றார். பாலு உட்பட அனைத்து மாணவர்களும் ரவியைப் பார்த்து கைதட்டி ஆரவாரம் செய்தனர். இப்போது ரவியோ பாலுவைப் பார்த்து மெய் மறந்து இரு கைகளையும் கூப்பி கும்பிட்டு க்கொண்டிருந்தான்.




# ஸ்லோத்
## அழிவின் நிலை விலங்கு



மத்திய தென் அமெரிக்கக் காடுகளில் வளரும் ஸ்லோத் (Slopth)என்னும் விலங்கு ஒரு மந்தமான நகர்வுடைய விலங்கு. சடுதியாக இவற்றைப் பார்க்கும் போது எமது நாட்டில் காணப்படும் தேவாங்கு (குரங்கு இனம்) போலவே இவை தோற்றமளிக்கின்றன. இவற்றின் பெயருக்கு ஏற்ற வகையில் வேகம் குறைந்தவையாகவே இருக்கின்றன. கடந்த பில்லியன் ஆண்டுகளில் எப்படியோ தப்பிப் பிழைத்துக் கொண்ட அரிய விலக்கினமாக இது காணப்படுகிறது. இவற்றின் அழிவுக்கு பேராசையும் சுயநலமும் கொண்ட மனிதர்களே காரணமாகச் சொல்லப்படுகின்றனர். இவை மரங்களின் மேலேயே வசிக்கும் மிகச் சாதுவான விலங்குகள். அதிலும் ஒரு குறிப்பிட்ட மரத்தின் இலைகளை மட்டுமே உணவாக உட்கொள்கின்றன. இந்த இலைகளை இவை ஒரு நாளில் பசி அடங்கும்வரை உண்கின்றன. அதன் பின்னர் ஒரு வார காலத்துக்கு வேறு எதனையும் அவை உண்பதில்லை. இவற்றின் சமிபாட்டு அமைப்பு என்பது இந்தச் செயல்நிலைகளுக்கு இயைபாக்க மடைந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவை ஒரு போதும் மரத்துக்கு மரம் தாவுவதில்லை. மரத்தின் மேலும் கீழுமாகவே இயக்க முறுகின்றன. கால்களில் 'பாவ்' என்று சொல்லப்படும் விரல்அமைப்பு இல்லை. நீண்டதான மூன்று நகம்போன்ற அமைப்பு காணப்படுகிறது. நகரமயமாதல், காடழிவு, சாலைகளை அமைத்தல் போன்ற காரணிகள் இந்த விலங்கினத்தையும் அழிவு நிலைக்குக்கொண்டு சென்றுள்ளன. மரங்களை வெட்டி அழிக்கும் போதே இவற்றில் பல மேலிருந்து விழுந்து அழிவடைந்து போனதாகத் தெரிவிக்கப் படுகின்றது. உலகம் முழுவதிலும் சேர்த்து இவ் விலங்குகளின் எண்ணிக்கை நூற்றைம்பது மட்டுமே என்று கணிப்பிடப் பட்டுள்ளது.



# அருகி வரும் அழகுக் கோலம்



தமிழரின் மரபு சார்ந்த பண்பாட்டுக் கலாசார அம்சங்களில் கோலம் போடுதலும் ஒன்றாகும். கோலம் என்றால் அழகு என்று பொருள்படும். இதுஒரு கலையும் கூட. வெறும் அழகுக்காக மட்டும் போடப்படுவதல்ல கோலம். அதற்குள் பல வயையான அறிவியல் ஆன்மிகம் சார்ந்த விடயங்கள் பொதிந்துள்ளன. கோலங்கள் பல வகைப்படும். தாமரை பூக்கோலம், குத்து விளக்குக் கோலம், பாம்புக்கோலம், துளசி மாடக்கோலம், வட்டக்கோலம், அன்னக்கோலம், மாக்கோலம், நவதானியக்கோலம், புள்ளிக்கோலம், நீர்க்கோலம் என கோல வகைகளை அடுக்கிக் கூறலாம். கோலம் போடுவதால் புலன்கள் ஒரு நிலைப்படுகின்றன. ஒரு புள்ளியில் ஆரம்பித்து பல புள்ளிகளை இட்டு பின் அந்தப்புள்ளிகளை முறையாக இணைத்து அதனை ஓர் அழகு கோலமாக மாற்றும்வரை எம் சிந்தனை வேறெங்கும் சொல்லாது. கோலம்போடுதல் உடலுக்கு நன்மை தருகின்றது. சூரிய உதயத்துக்கு முன்கோலம் போடும் போது பிராண வாயு அதிகளவில் உடலுக்குக் கிடைக்கின்றது. இதனால் உடல் சுறுசுறுப்பாக நாள் முழுவதும் இயங்குகிறது. குனிந்து நிமிர்ந்து கோலம் போடும் போது உடலில் குருதி ஓட்டம், சீராக்கப்படுகிறது. இடுப்பை வளைத்து தலையைக் குனிந்து கைகளால் கோலம் இடுவது, ஒரு வகையில் யோகாசனமும் கூட. கோலம் போடுவதற்கு அரிசிமாவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. அரிசி மாவில் கோலம் போடும்போது பூமியில் வாழும் எறும்பு முதலிய சிறு பூச்சிகளுக்கு அது உணவாகின்றது. இதனால் சிறு உயிர்களுக்கு உணவு அளித்த பேறு எமக்குக் கிடைக்கிறது. ஆனால் இன்று அரிசிமாவில் கோலம் போடுவது அருகி வருகிறது. அதற்குப் பதிலாக தேங்காய்ப் பூவில் கோலமிடப் படுகிறது. இதுவும் ஒரு வகையில் சிறந்ததாகும் . இதை விட காவி நிறக் கோலமும் போடப்படுகிறது.

தற்காலத்தில் அடுக்கு மாடி வீடுகள் அதிகமாகி விட்டதால் வீட்டு வாசல்களில் கோலமிட இடவசதி குறைவு. எனவே ஸ்ரிக்கர் கோலங்களும் பெருகிவிட்டன. தைப்பொங்கல் தினத்திலும், மார்கழி மாதம் 30 நாள்களிலும் கார்த்திகை தீபம், தீபாவளி தினத்திலும் வரவேற்பு விழா, தமிழ்விழாக்களிலும் கோலமிடுதல் இன்று வழகத்தில் உள்ளது. தைப்பொங்கல் தினத்தில் சூரியன் உதிக்க முன் எழுந்து வாசலைப் பசுச் சாணத்தால் மெழுகி அதனைச் சுற்றிக் கோலமிட்டு குத்து விளக்குடன் பூரண கும்பமேற்றி விட்டுத்தான் பொங்கல் பானையை அடுப்பிலேற்றுவர். பொங்கற் பானையும் கோலமிட்டே அடுப்பில் ஏற்றப்படும். ஆனால் இன்றைய அவசர உலகில் எல்லாமே மாறிவிட்டன. இந்த அழகுக் கலையான கோலக்கலையும் அருகிவருகிறது. இந்தக்கோலக் கலையை மாணவர்களுக்கு பயிற்றுவித்து அவற்றில் பரிசுப்போட்டிகள் வைப்பதன் மூலம் இந்தக் கலையை தமிழர் வாழ்வியலில் இருந்து அழியாது காக்கலாம்





வர்ணம் தீட்டுவோம்

நடக்க முடியாமல்
உட்கார்ந்து கொண்ட
முதியவர் அருகில்
நிழலும் வந்து
உட்கார்ந்து கொண்டது.

* * *

நாம்தான்
எல்லாவற்றையும்
எண்களாகவே
பார்க்கிறோமே.
“உனக்கு என்ன வயசு?”,
“எவ்வளவு சம்பளம்?”,
“எவ்வளவு பவுண்
போடுறாங்க?”,
“எவ்வளவு வருமானம்?”,
“எவ்வளவு சேர் லோன்
வேணும்” என்று ஒரு
நாளில் எவ்வளவு முறை
எண்களைப்
பயன்படுத்துகிறோம்?
எண்கள் மட்டும்
இல்லையென்றால்
எமக்கு கைகள் உடைந்த
மாதிரி ஆகிவிடும்...!




# எதிர்வரும் 8 ஆம் திகதி வெளிவருகிறது ‘சத்யா’

பிரதீப் கிருஷ்ணமூர்த்தி இயக்கத்தில் சிபிராஜ் , ரம்யா நம்பீசன், வரலட்சுமி நடிப்பில் உருவாகி இருக்கும் சத்யா’ படம் எதிர்வரும் 8ஆம் திகதி திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

‘சைத்தான்’ பட இயக்குநர் பிரதீப் கிருஷ்ணமூர்த்தி இயக்கத்தில் உருவாகியிருக்கும் இந்தப் படத்தில் சிபிராஜ், ரம்யா நம்பீசன், வரலட்சுமி முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சத்யா படத்தின் முன்னோட்டக் காணொலி அண்மையில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில், எதிர்வரும் 8ஆம் திகதி படம் திரைக்குவரும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எவ்வளவுதான் ஓட
வேண்டியிருக்கு...
சாவு எனும் வெற்றிக்
கோப்பையைப்
பெறுவதற்கு!

வியர்வை சிந்தாத
வாழ்க்கையில்
கடைசியில்
கண்ணீர்தான் சிந்த
வேண்டும்...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சுற்றத்தினரிடம் உறவு பலம் பெறும். தொழில் வியாபாரத்தில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பண வரவால் குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** உறவினர்களின் நல்ல கருத்துக்களை மதிக்க வேண்டும். சமூக அந்தஸ்து அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மிதுனம்:** அவசியமற்ற பணக்கடன் பெற வேண்டாம். தொழில், வியாபார நடைமுறையில் மாற்றம் செய்வது அவசியம். சேமிப்புப் பணம் உரிய செலவுக்குப் பயன்படும்.

**கடகம்:** எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணியை உடனே நிறைவேற்ற வேண்டும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வியாபாரம் செழித்து வளர வாய்ப்பு உண்டு. பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு இனிதாக நிறைவேறும்.

**கன்னி:** குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையை ஏற்று செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்திகரமாகும். பணப்பரிவரித்தனையில் முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** மன சஞ்சலம் நீங்க இஷ்ட தெய்வ வழிபாடு தேவை. தொழில், வியாபாரத்தின் இடையூறுகளை உடனே சரி செய்வது நல்லது. அளவான பணவரவு இருக்கும்.

**விருச்சிகம்:** முக்கியமான பணி நிறைவேற்ற கூடுதல் உழைப்பு அவசியம். மனதில் பதற்றம் வேண்டாம். தொழில் வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும்.

**தனுசு:** சமூக சிந்தனை அதிகரிக்கும். அனைவரிடத்திலும் மதிப்பு உயரும். தொழில் வியாபாரம் செழித்து மறுமலர்ச்சி உருவாகும். பணவரவு திருப்திகரமாகும்.

**மகரம்:** நண்பருடன் கருத்து முரண்பாடு ஏற்படலாம். செயல்களில் பொறுமை வேண்டும். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

**கும்பம்:** அவமதித்தவரிடமும் பெருந்தன்மையுடன் பழகுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.


**மீனம்:** மாறுபட்ட நிகழ்வினால் ஏற்படும் மன வருத்தம் தவிர்க்க வழிபாடு செய்யுங்கள். குடும்ப உறுப்பினரின் ஆறுதல் நம்பிக்கை தரும்.

பணமும்
ஞாயிற்றுக்கிழமையும்
ஒன்றுதான்....




வருவது தெரியும்
போவது தெரியாது....

முள்ளை மிதித்துவிட்டு
முள் குத்தியது என்று
முள்ளின் மேல்
பழி போடுறவன்




மனிதன்

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | | | | | | |
| | | | | | 5 | | | |
| | | 5 | | 4 | | 3 | 9 | |
| | | 3 | 5 | | 8 | 4 | | 6 |
| | | | | | | | | |
| 8 | | 1 | 3 | | 2 | 7 | | |
| | 7 | 6 | | 2 | | 8 | | |
| | | | 4 | | | | | |
| | | | | | | 9 | 2 | 3 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 8 | 4 | 9 | 2 | 1 | 6 | 5 |
| 6 | 2 | 9 | 3 | 1 | 5 | 8 | 4 | 7 |
| 5 | 1 | 4 | 6 | 8 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 9 | 1 | 8 | 4 | 3 | 2 | 5 | 6 |
| 2 | 5 | 6 | 9 | 7 | 1 | 3 | 8 | 4 |
| 8 | 4 | 3 | 2 | 5 | 6 | 7 | 9 | 1 |
| 4 | 3 | 5 | 1 | 2 | 8 | 6 | 7 | 9 |
| 9 | 6 | 2 | 7 | 3 | 4 | 5 | 1 | 8 |
| 1 | 8 | 7 | 5 | 6 | 9 | 4 | 2 | 3 |

நேற்றைய சுடோக்கு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

twitter.com/Anu_officl



சந்தேகத்துக்கு
விளக்கம் சொல்லிய பின்
புரிந்து கொண்டாலும் கூட,
நம்பிக்கை என்னவோ
உடைந்து தான் போகிறது.!!

twitter.com/TrollCopytwitz



எப்பொழுதும் இன்பம், துன்பம் என
ஏதோ ஒரு நினைவுகளில்
மூழ்கடித்துக்கொண்டே இருக்கிறது..
#வாழ்க்கை

twitter.com/ameerfaj



குழந்தைகள் பேசும் பேச்சுக்களில்
தெரிந்துவிடுகிறது பெற்றோரின்
வளர்ப்பின் லட்சணம் ...

# வரலாற்றில் இன்றைய தினம்
## 28.11.2017

821- பனாமா ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து கொலம்பியாவில் இணைந் தது.
1948 - பென்சில்வேனியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 154 பேர் உயிரிழந்தனர்.
1912 - ஒட்டோமானில் இருந்து அல்பேனியா சுதந்திரம் பெற்றது.
1943 - அமெரிக்க அதிபர் பிராங்ளின், பிரிட்டன் தலைமை அமைச்சர் வின்சன் சேர்ச்சில், சோவியத் தலைமை அமைச்சர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் சந்தித்துக்கொண்டனர்.
1975 - போர்த்துக்கல்லிடம் இருந்து கிழக்குத் தீமோர் சுதந்திரம் பெற்றது.
2006 - ராஜீவ் படுகொலை தொடர்பாக மூடிய அறைக்குள் விசாரணை.
2006 - போர்நிறுத்த உடன்படிக்கையைதொடர்ந்தும்கடைப்பிடிக்கத் தயார் என்று விடுதலைப்புலிகள் அறிவிப்பு.
2006 - ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என்று மகிந்தவிடம் தெரிவிப்பு.
2016 - மாவீரர் தினத்தில் பங்கெடுத்த அனைவரையும் கைது செய்ய கம்மின்பில கோரிக்கை.
2016 - 42 கிலோ கஞ்சாவுடன் பருத்தித் துறையில் மூவர் கைது.



2016 - சூழல் மாசடைவதைத் தடுக்க புது டில்லியில் பட்டாசுக்குத் தடை

## நாளை
**29.11.2017**
புதன்கிழமை
**கார்த்திகை 13**

திதி: தசமி கா.6.15 வரை
நட்சத்திரம்: ஏகாதசி பி.இ. 05.25 வரை
சுபநேரம்: 04.43–06.13வரை
ராகுகாலம்: 12.13–01.43 வரை




பத்தி எழுத்து

### மகத்தான மருத்துவ பணியை மனமுவந்து மேற்கொள்ளுதல் வேண்டும்

குடாநாட்டிலுள்ள மருத்துவமனைகளில் நோயாளர்களின் கூட்டம் அலைமோதிக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏதோவொருவகையில் நோய்களால் பீடிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனைகளை நாடிச் செல்கின்றனர்.

தற்போது நிலவி வருகின்ற காலநிலை காரணமாகவே நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இதனால் மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற அனைத்துப் பணியாளர்களுக்குப் பொறுப்புக்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றப்படுகின்றவர்கள் மருத்துவர்களே என்று கூறினால் அதை மிகையானதென கூறிவிட முடியாது. ஏனென்றால் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கி அவர்களின் உயிர்களைக் காப்பவர்கள் இவர்கள்தான். தற்போது குடாநாட்டிலுள்ள மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. யாழ். போதனா மருத்துவமனை போற்றத்தக்க வகையில் மருத்துவச் சேவையை வழங்கி வருகின்றது. அதன் பணிப்பாளர் தன்னலமற்ற சேவை நோக்குடன் பணியாற்றி வருவதால் மருத்துவமனையின் செயற்பாடுகள் சிறந்த வகையில் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தாதியர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நோயாளர்களை வெகுவாகப் பாதித்துவிட்டது. அவசர சிகிச்சை பெற வேண்டியவர்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இதில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டமை வருத்தத்தை அளித்தது. தாதியர்களின் போராட்டம் நியாயமானதாக இருந்தாலும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி நோயாளர்களே என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும்போது நோயாளர்களே பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் தனியார் மருத்துவமனையில் கண்புரையை நீக்குவதற்கான அறுவைச்சிகிச்சையை மேற்கொண்ட ஒன்பது பேரின் கண்கள் பாதிக்கப்பட்டதாக வெளியான தகவல் பலரையும் திடுக்குற வைத்துவிட்டது. பெரும் தொகையான பணத்தை மருத்துவமனைக்குச் செலுத்திய போதிலும் சிகிச்சை பெற வந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானது. இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாது பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மருத்துவமனைகள் மீதான நம்பிக்கையை மக்கள் அறவே இழந்துவிடுவார்கள்.

மருத்துவப் பணி புனிதமானது. தெய்வ காரியத்துக்கு ஒப்பானது. இதில் ஈடுபடுகின்றவர்கள் அதில் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தம்மை நாடி வருகின்ற நோயாளர்கள் பாதிப்புறாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு நடந்துகொள்ளும்போதுதான் இறைவனும் அவர்களை ஏற்றுக் கொள்வான்.

# உடல் உஷ்ணத்தை குறைக்க மோர் குடிக்கலாம்

உடல் வறண்டு இருக்கும் நேரத்தில் ஏதாவது ஜில்லென குடித்தால் போதும் என்று இருக்கும். ஏனெனில் நம்மை அறியாமலேயே நாம் வறண்டு இருப்போம். சக்தியின் அளவும் குறைந்து இருக்கும். இதன் காரணமே ஏதாவது குடித்தால் போதும் என்ற நினைப்பு எழும்.

- கொழுப்பற்ற தயிர் மிகவும் நல்லது. மோர் மிக மிக நல்லது. நாள் ஒன்றுக்கு இரண்டு கிளாஸ் மோராவது குடியுங்கள். ஆனால் வீட்டில் செய்யப்படும் கொழுப்பு நீக்கிய மோர் ஒரு நல்ல உணவு. அதில் அனைத்துச் சத்துக்களும் உள்ளன. இது நிதானமாகவே குடலில் உரிஞ்சப்படுகிறது.
- குடலில் உள்ள மசாலா உணவுகளை கழுவி எடுத்து விடும். பொதுவில் இதில் சீரகம், இஞ்சி, கொத்தமல்லி, பெருங்காயம் போன்றவற்றினை சேர்ப்பது வயிற்றுக்கு மேலும் நன்மை பயக்கின்றது. உடல் உஷ்ணத்தினை குறைக்கின்றது.
- குடலில் ஒட்டிக் கொள்ளும் எண்ணெய் பிசுபிசுப்பினை சுத்தமாய் நீக்கி விடுகின்றது.
- சமிபாட்டு சக்தியை கூட்டுகின்றது.
- வயிற்று உபாதைகளை நீக்குகின்றது.
- உடலில் நீர் சத்து குறையாமல் இருக்க உதவுகின்றது.
- உடலில் கல்சியம் சத்து கிடைக்க பெரிதும் உதவுகின்றது.
- விற்றமின் சத்துக்கள் நிறைந்தது. பிகாம்ப்ளெக்ஸ், டி சத்து நிறைந்தது. ஒருமுறை மோர் எடுத்துக் கொள்வது சுமார் 20 சதவீதம் சில விற்றமின் சத்துக்களை தந்து விடுகின்றது.
- மோரில் உள்ள ரிபோஃப்ளேவின் உணவினை சத்தாக மாற்றவும், ஹார்மோன்கள் சுரப்பதற்கும், சமிபாட்டு சக்திக்கும் உதவுகின்றது. உடலில் நச்சுத்தன்மை நீங்கவும், கல்லீரல் நன்கு இயங்கவும், நோய் எதிர்ப்பு சக்தி கூடவும் உதவுகின்றது.
- மோரில் உள்ள சில புரதங்கள் கொழுப்பு குறைவதற்கும் கிருமி நாசினியாகவும், வைரஸினை எதிர்ப்பதாகவும் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. மோர் குடிப்பது ரத்தக் கொதிப்பினை வெகுவாய் கட்டுப்படுத்துகின்றது.
- தீரா அசிடிடி இருக்கின்றதா. இது கோடையில் மேலும் கூடும். மோர் அசிடிடி நெஞ்செரிச்சலை வெகுவாய் கட்டுப்படுத்தும்.
- மோர் மலச்சிக்கலை நீக்கும்.
- மோரில் புரதம், விற்றமின்கள், கல்ஷியம், பொட்டாசியம், என்ஸைம்கள் என இருக்கின்றன. ஆனால் கொழுப்பு கலோரி சத்து மிக மிகக்குறைவு. ஆக இது இயற்கையாகவே ஒருவருக்கு எடை குறைப்பு தருகின்றது.
- இதிலுள்ள நல்ல பக்ரீரியாக்கள்
- உலகின் எலும்புகள் வலுவாய் இருக்கின்றன.
- அல்சர் எனும் வயிற்று, குடல் புண்களுக்கு மோர் இயற்கை வைத்தியம்.
- வாய் புண்களை தவிர்க்கின்றது.
- மூல நோய்க்கு மோர் உட் கொள்வது நல்லது.
- மோர் சளிக்கு எதிர்ப்பு சக்தி அளிக்கும்.

## தொலைந்து விட்டது

கந்தர்மடத்தைச் சேர்ந்தவர்களான முத்தையா கவிமுத்துமணி என்பவரின் கடவுச் சீட்டும், திருமதி கவிமுத்துமணி சாரதாமணி என்பவரின் கடவுச்சீட்டும் தேசிய அடையாள அட்டையும் சேர்ந்த பை தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு :-021 492 2427**

## வேலையாள்கள் தேவை

புத்தகக்கடை ஒன்றிற்கு வேலைக்கு பெண்கள் தேவை. நல்லூர் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு - 076 796 4450, 077 895 5378

## விற்பனைக்குண்டு

மோட்டார் சைக்கிள்கள்

1. HONDA DIO - NPBFL - XXXX
2. HONDA DIO - NPBFB - XXXX
3. HONDA DIO - NPBEF - XXXX
4. HONDA TRIGER - NPBDM - XXXX
5. HERO GLAMOUR - NPBEU - XXX
6. SUZUKI GIXXER - NPBEY - XXXX
7. TVS APACHE 180 - NPBFG - XXXX
8. TVS APACHE 200 - NPBFK - XXXX
9. BAJAJ PULSAR 150 - NPBEO - XXXX
10. TVS WEGO - NPBFF - XXXX

தொடர்புகளுக்கு - மேனகாந் 077 060 8074
077 364 4409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
No. 233, Stanly Road, Jaffna.
021 221 9997, 021 222 1898

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16.05.1933
மறைவு 25.11.2017

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி உதயகுமார் சுகந்தினி
அவர்களின் பாசமிகு தந்தை

**தம்பிப்பிள்ளை பேரம்பலம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/மிருசுவில் அரசினர்**
**தமிழ் கலவன் பாடசாலை.**

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்களான **திரு .ச. கோவிந்தராஜன்** அவர்களின் தாயாரும் **திருமதி கோ. பரிமளா** அவர்களின் மாமியாருமான.



**சச்சிதானந்தன் அருந்ததிதேவி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

**கார்த்திகேசு சோமநாதர்** (இராசையா விதானையார்)

(இளைப்பாறிய கிராமசேவையாளர் -துணுக்காய்)



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சோமநாதர் (இராசையா விதானையார்) 27.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு - சின்னத்தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் இலட்சுமியம்மாவின் (அழகக்கா) அன்புக் கணவரும் செல்லையா - பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சிவராசன்(ஓய்வு நிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர்), குமரதாசன்(ஓய்வு நிலை ஆசிரியர்) காலஞ்சென்ற கிருஸ்ணராஜா(கிராமசேவையாளர்), கணநாதன் (வீடமைப்பு அதிகாரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கரவெட்டி), பத்மநாதன்(தாதிய உத்தியோகத்தர், ஆதாரவைத்தியசாலை - பருத்தித்துறை), சரவணபவான்(உரிமையாளர், கஜன் பல்பொருள் வாணிபம் - துன்னாலை), சந்திரசேகரம் புவனேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்ற சௌ.தேவராணி மற்றும் வே.யோகராணி, சி.அருள்ராணி(ப.நோ.கூ.சங்கம் நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.மனோரஞ்சிதம், கு.குலதேவி, கி.ஜெயக்குமாரி, க.சகுந்தலாதேவி, ப.சாந்தினி, ச.கமலகுமாரி, சௌந்தரராஜன், வே.வேலுப்பிள்ளை காலஞ்சென்ற சி.சிவராசா காலஞ்சென்ற சந்திரசேகரம் ஆகியோரின் அன்பு மாமனும் மகாலிங்கம்(சின்னத்துரை), பாக்கியம்(ஆலங்குளம்) காலஞ்சென்ற சபாரத்தினம்(உயிலங்குளம்), காலஞ்சென்ற சின்னத்தங்கைச்சி(செல்லாச்சி - ஆலங்குளம்) ஆகியோரின் மூத்த சகோதரனும் திருப்பதி சண்முகநாதன், காலஞ்சென்ற வீரசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் கியான்காடு மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தேவதானம்,துன்னாலை வடக்கு, கரவெட்டி.**
**தகவல்:குடும்பத்தினர். பிள்ளைகள், மருமக்கள்**

**077 730 2714/ 077 071 1127/ 077 884 9509/ 077 779 7748/ 077 590 7543**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1419
சீட்டிழுப்பு திகதி 2017.11.27

வெற்றி இலக்கங்கள் 20 30 51 53 F

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 12,746,968/-

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 89
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.11.27

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,260,660/-

வெற்றி இலக்கங்கள் 01 20 23 52 I

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2961 திகதி 27.11.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 10 53 62 75 X
போனஸ் இல.: 24
புதன் கிழமை ஜக்பொட்: 3,065,835/=

தொ.இல : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 734
சீட்டிழுப்பு திகதி ▶ 27.11.2017 திங்கட்கிழமை

L 06 51 61 70

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46.732, 188/-

தொ.இல : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 07.06.1912
மரணம் 20.11.2007

அமரர் திருமதி
**பாக்கியம் செல்லையா**
திதி - தசமி

மாதருள் திலகமாய் மனையறம் போற்றி ,
நன்மக்கள் பெற்று நாடு போற்றிட .
நல்வாழ்வு பெற்று வம்சமுடன் வாழ்வாங்கு வாழ்ந்து .
வீடுபேறு எண்ணி விரைந்தாலும் !
"நீர் தந்த பாசத்தை நெஞ்சம் மறப்பதில்லை"

**விளாத்தியடி லேன், உரும்பிராய் வடக்கு. உரும்பிராய்.**

**பசுமையான நினைவுகளுடன்:**
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பேரர்கள்.

## இதய அஞ்சலி




எமது
நிறுவன வளாகத்தில்
வீற்றிருக்கும் ஞான
வைரவர் ஆலய பூசகர்
அவர்களின் அன்புத்
தந்த்தயாரும் பிரதம
குருவுமாகிய
**சிவஸ்ரீ**

**நாகலிங்கஐயர் யோகீஸ்வரக் குருக்கள்**

அவர்கள் சிவபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த வேதனையடைகின்றோம். அவர்தம் குடும்பத்தினரின் துன்பங்களில் பங்கெடுப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்தாபகர், பணியாளர்கள்,**
**தியாகி அறக்கொடை நிறுவனம்**
**527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### குமாரசாமி கனகரத்தினம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகரத்தினம் (25.11.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (குமாருவப்பா) தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நவரத்தினராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவகுமார்(கனடா), சிவபாலன் (சுவிஸ்), சரோஜாதேவி (கனடா), தேவகுமார், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஸ்ரீதயா மற்றும் சுந்தரி, குணராஜன், சிவமலர், இந்திரஜித் (பொது சுகாதாரப் பரிசோதகர், இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மசுதர்சன், கபிலன், நிலானி, துஷ்யந்தி, துஷ்யந்தன், தருணன், கஜீபன், மதுஷா, மதுராங்கி, சங்கீர்த்தனன், விஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் நிலானிகாவின் அன்புப்பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**
**0215619370**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திரு. துரையப்பா செல்வரத்தினம்

**மலர்வு : 20.06.1931** **உதிர்வு : 26.11.2017**

மலேஷியாவின் கோள்ளாலம்பூரை பிறப்பிடமாகவும், உரும்பிராய் / வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.துரையப்பா செல்வரத்தினம் அவர்கள் 26.11.2017 ஞாயிற்றுக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார். இவர் மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் இளைப்பாறிய கண்காணிப்பாளரும், மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் ஆலய 2ம் திருவிழா உபயகாரரும் ஆவார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. துரையப்பா, திருமதி. செல்லம்மா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. அழகரத்தினம் (Malasiya) திருமதி. தவமணி, திரு. சுப்ரமணியம், அவர்களின் அன்புச் சகோதரனும், திருமதி சந்திரகாந்தாவின் அன்புக் கணவரும், கீத்தா (Nepal), நிமால், ராதிக்கா (Canada), ரமணன் (Canada), காலஞ்சென்ற மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாசன் (Nepal), துவாரகா, சத்தியநேசன் (Canada), ஜமுனா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஷ்னி (Australia) அமிர்தன் (Australia) , பவித்ரா, விசாகன், அபினயா (Canada), அபிலாஷ் (Canada), சகானா (Canada), ஷர்மினா (Canada) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 29.11.2017 புதன்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.11.2017 வியாழக்கிழமை அன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

தகவல்: குடும்பத்தினர்

**தொடர்புகளுக்கு : 0773771222 / 0114954411**

## செவிப்புலன் கருவி விற்பனைக்கு

**செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா...? கவலையை விடுங்கள்...!**

மிகக்குறைந்த தொகையாக ரூபாய் 4999/- மட்டும் செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை கைவசமாக்கிக் கொள்ளுங்கள். சென்ற தடவை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஒரு அரிய சந்தர்ப்பம்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.**
**077 434 6245**

## அறிவித்தல்

### வட மாகாண விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண சபையின் விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்திற்கு முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பம் வட மாகாண தலைமை செயலாளர் அவர்களால் கோரப்படுகின்றது. இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 08.12.2017 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk→ Recruitment and Exam →Advertisement என்ற வடக்கு மாகாண இணைய தளத்தில் மேலே குறிப்பிட்ட பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு தகவல்களையும் தகைமைகளையும் பார்வையிட்டு தகைமை உடையவர்கள் உரிய விண்ணப்ப படிவங்களை இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**க. பத்மநாதன்,**
**மாகாண பிரதி திட்ட பணிப்பாளர்,**
**விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்டம், வடக்கு மாகாணம்.**

## மரண அறிவித்தல்

### செல்வராசா ரவிக்குமார்



பலாலி மேற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் தற்போது மயிலங்காடு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ரவிக்குமார் நேற்று (27.11.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா (செந்திமாமா) - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தவமணிதேவி, சுரேஸ்குமார் (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற பிறேமா தேவி ஆகியோரின் சகோதரரும் ரவிக்குமார் பேரின்பகுமாரியின் பாசமிகு கணவரும் தாரிகாவின் அன்புத் தந்தையும் சிவகுமார், விஸ்ணுகுமார், இரத்தினகுமாரி, மகேந்திர குமாரி, சுரேஸ்குமார் வனிதா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் திருஷ்ணாவின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

*பிறப்பு*
*24 . 10 . 1942*



*இறப்பு*
*27 . 11 . 2017*

### பத்திநாதர் மரியநாயகம்

யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்திநாதர் மரியநாயகம் நேற்று (27.11.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பத்திநாதர் - கிளாரம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான லோறன்ஸ் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மரியமலரின் அன்புக் கணவரும் மேரி இமெல்டா, காலஞ்சென்ற யேசுநேசன் மற்றும்மேரி நேசராணி, காலஞ்சென்ற அலோசியஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் றொகான், தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனும் றொனால்டோ, தீபராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (29.11.2017) புதன்கிழமை பி.ப. 03.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின் தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூய கதிரை அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**076 383 8641** **தகவல்: குடும்பத்தினர்.**



**இது புதுசு**

**பெண்களுக்கான நவீன வகைகள் காதணிகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.**

## சிவலோக ப்ராப்த்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



### சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்

பழமையும்பெருமையும்தகைமையும் பெற்று மரபு தழுவாத மூத்த சிவாச்சாரியார் மைத்துனர் (தங்கையின் கணவர்) சிவாகம பிரதிஷ்டா சக்ரவர்த்தி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்களின் மறைவு எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் இழப்பு துன்பவியலில் பங்குகொண்டு ஆத்மா சிவலோக ப்ராப்த்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் (மைத்துனர்)**
**குடும்பத்தினர்.**
**நயினாதீவு, சுதுமலை.**

## மரண அறிவித்தல்



### திருமதி
### வள்ளியம்மை சுப்பிரமணியம்

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் நேற்று (27.11.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பூரணம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் ஞானேஸ்வரி, கனகமணி, தங்கச்சி அம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் சிவஞானம், தம்பி ஐயா, நவரத்தினராசா, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் சந்திரகாந்தன், குகனேந்திரன் (சிவம்) ஆகியோரின் தாயாரும் இராசலட்சுமி, கைலேஸ்வரி, இந்திரா, சசி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் அம்பிகாதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,**
**இணுவில்.**

**தகவல்;**
**குடும்பத்தினர்.**

# தமது நலன்கருதியே பன்னாடுகள் இலங்கையில் கால் பதித்துள்ளன

## ஈழத்தவர்களுக்காக அவை ஒன்றும் பரிந்து பேசவில்லை என்கிறார் நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 28

இலங்கைத்தீவில் கரிசனை கொண்டுள்ள பலமிக்க அனைத்துலக நாடுகள் ஒடுக்கப்பட்ட, இன அழிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் பக்கம் தமது ஆதரவை வெளிப்படுத்தும் நிலையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக தமது நலன்களை வென்றெடுக்கக் கூடிய அரசை இலங்கைத்தீவில் அமைப்பதிலும், அந்த அரசைப் பாதுகாப்பதிலுமே கூடுதல் கவனம் செலுத்துகின்றன.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் மாவீரர்நாள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் விசுவநாதன் உருத்ரகுமாரன் விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

1950களில் சிங்களம் ஆரம்பித்த தமிழின அழிப்புத் திட்டத்தை மாவீரர்களின் போராட்டம் நெருக்கடிக்குள்ளாக்கியிருந்தது. மாவீரர்களின் போராட்டம் முகிழ்த்தெழுந்திருக்காவிடின் சிங்களம் தனது தமிழின அழிப்புத் திட்டத்தில் இற்றைக்குக் கணிசமான தூரம் முன்னேறியிருக்கும். 2009 ஆம் ஆண்டின் மே மாதத்தின் பின்னர் திட்டமிட்ட வகையில் சிங்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புத் திட்டம் இதனை உய்த்துணர வைக்கிறது.

மாவீரர்களின் கனவை நனவாக்கும் இலக்குடனேயே நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கொள்கையை வகுத்துக் கொண்டது. 2010 ஆம் ஆண்டில் நாடுகடந்த தமிழீழ அரசை நாம் உருவாக்கியபோது மாவீரர்களை மனதில் இருத்தியே அதனை உருவாக்கிக் கொண்டோம். அன்றிலிருந்து இன்றுவரை சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை அமைப்பதற்கான செயற்பாடுகளை அனைத்துலக அரங்கில் நாடுகடந்த தமிழீழ அரசு முன்னெடுத்து வருகிறது. ஜனநாயகவழியில், அரசியல், இராஜதந்திர ரீதியிலான போராட்ட முன்னெடுப்புகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வது நாடுகடந்த தமிழீழ அரசின் தனித்துவமான அணுகுமுறையாக உள்ளது.

ஆயுதம் தாங்கிய போராட்டம் நடைபெற்று, தமிழீழ நடைமுறையரசு அமைக்கப்பட்டிருந்த காலத்தில் தமிழ் மக்களிடம் இருந்த வலு தற்போது எம்மிடம் இல்லாதுவிடினும் மென்வலு அடிப்படையிலான வலிமையைத் திரட்டிக் கொள்ளக்கூடிய வியூக முக்கியத்துவம் மிக்க மக்களாக நாம் விளங்குகிறோம். அனைத்துலக ஒழுங்கு தர்மத்தின் சக்கரத்தில் சுழல்வதில்லை, மாறாக நலன்கள் என்ற அச்சிலேயே சுற்றுகின்றது எனத் தேசியத் தலைவர் அவர்கள் முன்னொருதடவை அழகாகக் குறிப்பிட்டிருந்தார். தேசியத் தலைவரது வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனம் மிக்கவை என்பதை நாம் இன்று தெளிவாக உணர முடிகிறது.

இந்தச் சூழலில் அனைத்துலக அரசுகளைக் கையாள்வதில் இருவகையான போக்குகளை ஈழத் தமிழர் அரசியலில் நாம் காணமுடிகிறது. ஒரு போக்கு அனைத்துலக அரசுகளின் கடைக் கண்பார்வைக்காகக் காத்துக் கிடக்கிறது.

அனைத்துலக நாடுகளின் நிலைப்பாடுகளை எந்தவித எதிர்ப்புமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டு, எங்களையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று அது அவர்களிடம் கெஞ்சுகிறது.

இரண்டாவது போக்கு, தமது நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளாத அனைத்துலக நாடுகளை முற்றாக நிராகரித்து, தன்னைத்தானே அனைத்துலக அரங்கில் இருந்து அந்நியப்படுத்திக் கொள்கிறது. தமிழ் மக்களின் நலன்களுக்கு மாறான அனைத்துலக நாடுகளின் செயற்பாடுகளைக் கடுமையாகக் கண்டிப்பதுடன் இவற்றை 'அனைத்துலகச்சதி' என்ற நோக்குநிலையில் இருந்து அணுகுகிறது.

இந்த இரண்டு போக்குகளும் தமிழ் மக்கள் அனைத்துலகச் சமூகத்தைக் கையாள்வதற்குப் பொருத்தமற்றவை என்று நாம் கருதுகின்றோம். இதனால் நாடுகடந்த தமிழீழ அரசு இந்த இரண்டு போக்குகளுக்கும் உட்படாத மூன்றாவது புதிய போக்கைத் தனது அணுகுமுறையாகக் கொண்டிருத்தல் அவசியம் எனக் கருதி அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம் - என்றுள்ளது. (4)

### கண்ணீரோடு...

மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மாலை 3 மணிக்கே மாவீரரின் பெற்றோர், உறவினர்கள் வர ஆரம்பித்துவிட்டனர். தம்மோடு எடுத்து வந்திருந்த மலர் மாலைகளை தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த நினைவிடத்தில் அணிவித்தனர். சாம்பிராணி கொளுத்தினர், மாவீரராகிப் போன தமது உறவுக்கு விருப்பமான உணவுகளைப் படைத்தனர். மண்ணில் அமர்ந்திருந்து கதறி அழுதனர். அழுது அரற்றினர்.

"என்ர ராசா அப்பு, எங்கயடா போனா, அம்மா வந்திருக்கிறன்டா, அம்மாவைப் பாருடா" என்று தாயார் ஒருவர் மகனின் உடைந்து போன கல்லறையைக் கட்டிப் பிடித்து அழுதது பார்ப்போரின் கண்ணில் கண்ணீரைக் கசிய வைத்தது.

ஈகச்சுடரேற்றும் நேரத்திலும் அதன் பின்னர், ஒலிக்க விடப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினப் பாடலின் போதும், மாவீரர்களின் உறவுகளின் அழுகை - உணர்வு வீச்சம் பெற்றது. (உ-5)

### மாவீரர்களை...

லைப் புலிகள் களத்திலிருந்த காலத்தில் பெரும் எழுச்சியுடன் இந்தநாள் கடைப்பிடிக்கப்பட்டது. நேற்றும் மக்கள் தன்னெழுச்சியுடன் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

மழை நேற்றுமுன்தினம் இரவும் நேற்று மதியமும் பெய்தபோதும், மாவீரர் நினைவு நடைபெறும் மாலைநேரம் இயற்கை எந்த இடையூறையும் ஏற்படுத்தவில்லை.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, உடுத்துறை துயிலும் இல்லத்தில் ஆயிரம் பேர் வரையில் கலந்துகொண்டனர். பிரதான ஈகச்சுடரை 4 மாவீரர்களின் தாயாரான கந்தசாமி சரஸ்வதி ஏற்றினார். அங்கு 300 ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகள் நினைவாக தீருவிலில் உள்ள திடலில் நேற்று மாலை பெரும் எடுப்பில் மாவீரர் நினைவேந்தல் நடத்தப்பட்டது. மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இங்கு மேஜர் கிண்ணி மற்றும் மேஜர் முரளி ஆகிய மாவீரர்களின் தாய் முதன்மை ஈகச்சுடரை ஏற்றினார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக இராசபாதை வீதியில் மாவீரர் தினம் நடைபெற்றது. இராசபாதை வீதி முழுமையாக மூடப்பட்டது. இங்கு முதன்மைச்சுடரை மூன்று மாவீரர்களின் தந்தை அப்புலிங்கம் ஏற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாவீரர் நினைவுத்தூபியில் நேற்று இரவு ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. பாசையூரில், கடற்கரையில் மாவீரர் தினம் நடந்தது. பிரதான ஈகச்சுடரை சிறுத்தைப் படையணியைச் சேர்ந்த மாவீரர் துவாரகனின் தந்தை ஏற்றினார். சாட்டியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் 3 மாவீரர்களின் தந்தை இராசலிங்கம் ஈகச்சுடர் ஏற்றினார். முதல் கடற்கரும்புலி அங்கயற்கண்ணி நினைவாக கடலிலும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

கிளிநொச்சியில் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சுமார் 3 ஆயிரம் பேரின் பங்கேற்புடன் மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர். கரும்புலி கப்டன் நங்கையின் தந்தை முதன்மைச் சுடரை ஏற்றினார். மதகுருமாரும் கலந்து கொண்டனர். கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர். மிகப் பெரும் எழுச்சியுடன் மாவீரர் தினம் இங்கு கடைப்பிடிக்கப்பட்டது. மூன்று மாவீரர்களான லெப். கேணல் தியாகராஜா, லெப்டினன் தியாகவிழி, லெப்டினன் தியாகமாலா ஆகியோரின் தாயாரான க.தவமணி முதன்மைச் சுடரை ஏற்றினார்.

மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் லெப்.கேணல் வன்னிமன்னனின் தாயார் திருமதி லூசியா முதன்மை ஈகச்சுடரை ஏற்றினார். ஆண்டான்குளத்தில் மூன்று மாவீரர்களின் தந்தையான ஞானப்பிரகாசம் முதன்மை ஈகச் சுடரை ஏற்றினார். மதகுருமார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

வவுனியா மாவட்டத்தில் கள்ளிக்காடு மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நடைபெற்றது. லெப்.கேணல் நவம் சகோதரி யோகா, பிரிகேடியர் பால்ராஜின் சகோதரன் சந்திரன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெற்றது. இறுதிப்போரில் வீரச்சாவைத் தழுவிய முக்கிய தளபதிகள், போராளிகளின் உடல்கள் புதைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்திலும் மாவீரர் நாள் நினைவு கூரப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் துயிலும் இல்லச் சூழலிலும் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. தேராவில் துயிலும் இல்லத்தில் மாவீரன் நெடியவனின் தாய் கணேசன் ஜானகி முதன்மைச் சுடரை ஏற்றினார். முள்ளியவளை துயிலும் இல்லத்தில் மேஜர் பசீலனின் தாய் முதன்மைச் சுடரை ஏற்றினார். வன்னிவிளாங்குளத்தில் இங்குயிலின் தந்தை பிரதான சுடரை ஏற்றினார். இரட்டைவாய்க்கால், இரணைப்பாலை துயிலும் இல்லத்திலும் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

கோட்டைக்கல்லடி முகாம், அளம்பில், ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் நேற்று மாவீரர் நினைவேந்தல்கள் எழுச்சியுடன் நடந்தன.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை சம்பூர், மட்டக்களப்பில் மாவடி, அம்பாறையில் கஞ்சிக்குடிச்சாறு ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெற்றன.

(5,4,6,8,26,37,101,56,ரி3,108,109,ரி,ரி2)

### பிறந்தநாள்...

விடுத்துள்ளனர்.

இரு தரப்பினரிடையே சமரசத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக வளாகத்தை காலவரையறையின்றி மூடுவதற்கு நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. அது தொடர்பான அறிவித்தல் அனைத்துப் பீடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ற-402)

### 93 உள்ளூராட்சி...

சைக்குள்ளும் சட்டச் சிக்கல்களுக்குள்ளும் சிக்காத எஞ்சிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய திகதியில் தேர்தலை நடத்த முடிவு செய்தது. இதற்கு அமைவாக 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வேட்புமனுக் கோரும் அறிவித்தல், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக வெளியிடப்பட்டது.

எதிர்வரும் டிசெம்பர் 13ஆம் திகதி நண்பகல் வரையில் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்த முடியும். கட்டுப்பணம் செலுத்திய அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் டிசெம்பர் 11ஆம் திகதியிலிருந்து 14ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தெரிவத்தாட்சி அலுவலரிடம் (மாவட்டச் செயலர்) வேட்புமனுக்களைக் கையளிக்க முடியும்.

இந்தத் தேர்தலைப் பிற்போடுவதற்குக் கூட்டு அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்து வருகின்றது என்கிற குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில், முட்டுக்கட்டைகளைத் தாண்டி ஒரு பகுதித் தேர்தலையாவது திட்டமிட்டபடி நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டமாக உள்ளது. (உ-5)

### முக்கிய...

- தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் மாவீர்கள் நினைவாக தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டதைப்போன்று துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோருக்கு நேற்று தென்னை மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.
- மாவீரர் நினைவேந்தல் முடிந்து வெளியேறும்போது துயிலும் இல்லங்களில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல்களை, பொலிஸார் சீர் செய்தனர்.
- தீருவில் திடல் நினைவேந்தலில் மாவீரர்களின் ஒளிப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. (உ-5)

### கடலிலும்...

வடமராட்சியில் நேற்றைய தினம் கடலினுள் படகில் சென்று ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

தொண்டமனாறு கடற்கரையிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் கடலில் அலங்கரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த படகில் கடலில் காவியமான மாவீரர்கள் நினைவாக, எம்.கே.சிவாஜிலிங்கம் ஈகச்சுடர் ஏற்றினார்.

சாட்டித் துயிலும் இல்லத்திலும் கடற்கரையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பாசையூரிலும் கடலில் சாவைத் தழுவிய மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேபோன்று முல்லைத்தீவுக் கடற்கரையிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (உ-5,26,37,ரி)

### சில இடங்களில்...

எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் இதே துயிலும் இல்லம் முன்பாக நேற்றுக் காலை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அவர்கள் அங்கிருந்து அகன்றதும் சுடரை தண்ணீர் ஊற்றி இராணுவத்தினர் அணைத்தனர்.

மாலையில் மாவீரர்தின நிகழ்வு நடைபெற்ற போது, இராணுவத்தினர் தமத வாகனங்களை வீதியில் நிறுத்தி வைத்து நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்த முயன்றனர். ஈகச்சுடர் ஏற்றும் நேரத்தில், தமது வாகனங்களை 'ரேஸ்' செய்து பெரும் சத்தம் எழுப்பி குழப்ப முயன்றனர். ஏனினும் அவர்களைப் பொருட்படுத்தாமல் நிகழ்வு நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. திடீரென பொலிஸார் நேற்றைய தினம், மாவீரர் தினம் நடத்த வேண்டாம் என்று நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் கூறி நீதிமன்ற உத்தரவு ஒன்றைக் கொடுத்துள்ளனர். ஆனால் திட்டமிட்டவாறு மாவீரர் நாள் நிகழ்வு நேற்று மாலைநடைபெற்றது. (உ-5,8,108,ரி3)

### வடக்கில்...

போட்டியிடுவதற்கு எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ நேற்று மாலை வரை கட்டுப் பணம் செலுத்தவில்லை என்று யாழ்ப்பாண தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதிமன்றம் உள்ளிட்ட எந்தவொரு சர்ச்சைக்குள்ளும் சிக்காத 93 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக் கோரல் நேற்று வெளியிடப்பட்டது. இதனுள் வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரி நகரசபை மாத்திரமே உள்ளடங்குகின்றது. சாவகச்சேரி நகரசபைக்கான வேட்புமனு கோரும் அறிவித்தல் மும்மொழிகளிலும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும், சாவகச்சேரி நகரசபையிலும் நேற்று ஒட்டப்பட்டுள்ளது.

நேற்று மாலை வரையில் எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ கட்டுப் பணம் செலுத்தவில்லை. (உ-5)

### உடனடியாகவே...

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கும் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவே 16 இடங்களிலும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. 3 மாவட்டங்களில் இந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை, காலி மற்றும் கம்பகா மாவட்டங்களிலேயே இந்தக் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவுக்கான பேச்சுக்களை மகிந்த அணி தொடர்ந்து ஒரு புறம் முன்னெடுத்து வந்தாலும் தனித்துப் போட்டியிடுவதற்கும் கட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ஆஷஸை வெற்றியுடன் ஆரம்பித்தது ஆஸி.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நடப்பு வருட ஆஷஸ் தொடர் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 302 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. சிமித் ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களைப் பெற்றார். அவரை விட மார்ஷ் 51 ஓட்டங்களையும், கம்மின்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புரோட் 3 இலக்குகளையும், அண்டர்சன், மொயின் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும் வோக்ஸ், போல், ரூட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. ரூட் 51 ஓட்டங்களையும், பரிஸ்ரொவ் 42 ஓட்டங்களையும், மொயின் அலி 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ராக், ஹசில்வூட், லையன் மூன்று இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆஸ்திரேலிய அணிக்கு இலக்காக 170 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. பாங்குரொப்ட், வோர்ணர் இருவரும் களமிறங்கினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது ஆஸ்திரேலியா. ஆஸ்திரேலிய அணி கூடுதலாக 56 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற நிலையில் நேற்று களமிறங்கியது. பாங்குரொப்ட், வோர்ணர் இருவரும் அரைச்சதம் கடந்தனர். இலக்குச் சரிவில்லாமல் வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி.

(ம)





## கலாநிதி அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், நவ. 28

காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைநகர் பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட தொடரில் கலாநிதி அணி கிண்ணம் வென்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலாநிதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கலாநிதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

## ஹப்பினஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 28

பாசையூர் யுப்பிற்றஸ் அமைப்பின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாசையூர் உள்ளூர் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட தொடரில் 15 வயதுப்பிரிவில் ஹப்பினஸ் அணி கிண்ணம் வென்றது.

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஹப்பினஸ் அணியை எதிர்த்து றெஜின்போ [illegible]ரைகஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ஹப்பினஸ் அணி கிண்ணம் வென்றது.

(ம-23)

## கலைமகள் 'பி' சம்பியனானது



யாழ்ப்பாணம், நவ. 28

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் இரண்டு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி கலைமகள் 'பி' அணி சம்பியனானது.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த இறுதி ஆட்டம் இடம்பெற்றது. இதில் அச்சுவேலி கலைமகள் 'பி' அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. முதலாவது செற்றை அச்சுவேலி கலைமகள் அணி 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை புத்தூர் வளர்மதி அணி 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது.

அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய கலைமகள் 'பி' அணி அந்த செற்களை முறையே 25:16, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாமிடத்தை அம்பாள் அணி தனதாக்கியது.

(ம-422-108)



பன்னாட்டு கராத்தே சம்மேளனத்தால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கராத்தே ஆசிரியர் மா.இரத்தினசோதி 7ஆவது கறுப்புப் பட்டியும், இலங்கை கராத்தே சம்மேளனத்தால் 8ஆவது கறுப்புப் பட்டியும் வழங்கி அண்மையில் மதிப்புறுத்தப்பட்டார். (ம-23)

## வென்றது அத்லெட்ரிகோ

லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அத்லெட்ரிகோ மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது. அத்லெட்ரிகோ மட்ரிட்டை எதிர்த்து லெவன்டே மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் அத்லெட்ரிகோ மட்ரிட் வெற்றிபெற்றது. கிறீஸ்மன், கெவின் இருவரும் தலா இரு கோல் களைப் பதிவுசெய்தனர். (ம)






வடமாகாண பாடசாலைகளின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் வளவாளராக இலங்கை துடுப்பாட்ட அணியின் வேகப்பந்து வீச்சாளர் ருஜித பெரேரா கலந்து கொண்டார். (ம-422)



## பெயர்ன் மூனிச் தோல்வி

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பெயர்ன் மூனிச் தோல்வியடைந்தது.

புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் பெயர்ன் மூனிச் 1:2 என்ற கோல் கணக்கில் பொரிசியா அணியிடம் தோற்றது. பொரிசியா அணி சார்பாக, தொர்கன் ஹஸார்ட், மத்தியாஸ் ஜின்டர் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்றனர். மூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை விடால் பெற்றார். (ம)

# தென்னாபிரிக்காவுக்கு எதிராகவும் ஆக்ரோசம் தொடர்ந்து செல்லும்

## கோக்லி தெரிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் ஆக்ரோசமான ஆட்டம் தொடரும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

“நான் இப்படித்தான் விளையாட விரும்பினேன். அப்படியே செய்தேன். ஓரளவு விரைவாக ஓட்டங்களைக் குவித்தால்தான் எதிரணியினரை வீழ்த்த பந்துவீச்சாளர்களுக்கு போதிய அவகாசம் கிடைக்கும். அயல்நாடுகளிலும் இத்தகைய அணுகுமுறை தேவை, அதனை எதிர்நோக்குகிறேன். பெரிய சதங்கள் மூலம் என் ஆட்டத்தை நான் மேம்படுத்த எப்போதும் விரும்புகிறேன். இதற்குக் காரணம் அணியின் பயன் தவிர வேறில்லை. சதம் அடித்த பிறகு கவனம் சிதறினால் ஓரிரு இலக்குகளை விரைவில் இழந்து விட வாய்ப்புள்ளது. நன்கு நிலைத்த துடுப்பாட்ட வீரர் புதிதாக களமிறங்குவோரைக் காட்டிலும் விரைவில் ஓட்டங்களை எடுக்க முடியும். ஆகவே இந்த முறைகளிலேயே நான் சிந்திக்கிறேன். என்னுடைய உடல் தகுதி நீண்ட நேரம் நான் துடுப்பெடுத்தாட உதவுகிறது. வீரர்கள் அனைவரும் சிறப்பாக விளையாடுகின்றனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் ஆக்ரோசமான விளையாட்டுத் தொடரும் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



# இலங்கை அணியை சுருட்டியது இந்தியா

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவுசெய்தது.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரில் இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 205 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சந்திமல் 57 ஓட்டங்களையும், கருணாரத்ன 51 ஓட்டங்களையும், டிக்வெல்ல 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், ஜடேயா, இசாந் சர்மா இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 6 இலக்குகள் இழப்புக்கு 610 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அணித் தலைவர் கோக்லி 213 ஓட்டங்களை விளாசியிருந்தார். புஜாரா 148 ஓட்டங்களையும், முரளி விஜய் 128 ஓட்டங்களையும், ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், கமகே, கேரத், சானக மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் ஒரு இலக்கை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கருணாரத்ன 11 ஓட்டங்களுடனும், திரிமன்ன 9 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 18 ஓட்டங்களுடன் கருணாரத்னவும், 23 ஓட்டங்களுடன் திரிமன்னவும் ஆட்டமிழந்தனர். சந்திமல் மத்திய வரிசையில் பெற்ற 61 ஓட்டங்களே அதிகபட்சம். லக்மல் பின்வரிசையில் 31 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் பிரகாசிக்கத் தவறினர். முடிவில் 166 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

இன்னிங்ஸாலும் 239 ஓட்டங்களாலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. கோக்லி ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ம)

# ஒருநாள் தொடரில் இல்லை கோக்லி

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேற்று அறிவித்தது. கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் தலைவராக ரோகித் சர்மா பெயரிடப்பட்டார்.

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிந்த பின்னர் அடுத்ததாக மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதன்படி முறையே டிசெம்பர் 10, டிசெம்பர் 13, டிசெம்பர் 17 ஆகிய திகதிகளில் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்திய அணி விவரம்– ரோகித் சர்மா (தலைவர்), தவான், ரகானே, ஸ்ரோர்ஸ், பாண்டே, யாதவ், தினேஷ் கார்த்திக், டோனி, ஹர்திக் பாண்டியா, அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ், சாகல், பும்ரா, புவனேஷ்வர் குமார், சித்தார்த் கவுல்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் ஆரம்பமாகும் முன்னர், தனக்கு சிறிது காலம் ஓய்வு தேவை என்று கோக்லி கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




# மலாகாவை வென்றது ரியல் மட்ரிட் அணி

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல்மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட்டை எதிர்த்து மலாகா மோதியது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் பென்சிமா. 18ஆவது நிமிடத்தில் மலாகாவின் கோலைப் பதிவுசெய்தார் ரோலன். 21ஆவது நிமிடத்தில் காஸ்மிரோ, மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட்.


சோர்டி 58ஆவது நிமிடத்தில் மலாகாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 78ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மட்ரிட்டின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது. (ம)



# அஸ்வின் சாதனை

டெஸ்ட் அரங்கில் விரைவாக 300 இலக்குகளை வீழ்த்திய சுழல்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின்.

இலங்கைக்கு எதிராக நேற்று முடிவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின் 8 இலக்குகளை வீழ்த்தினார். இந்த இலக்குகளின் பங்களிப்புடன் விரைவாக 300 இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். ஆஸ்திரேலிய வீரரான லில்லி 56 ஆட்டங்களில் படைத்திருந்த சாதனையை அஸ்வின் தனது 54ஆவது ஆட்டத்தில் முறியடித்தார். இந்தப் பட்டியலில் 58 ஆட்டங்களில் 300 இலக்குகளை வீழ்த்திய முரளிதரன் மூன்றாவது இடத்தில் உள்ளார். (ம)






மாணவர்களே ஒரு அரிய சந்தர்ப்பம்

**CHANGE YOUR LIFE**
**CONNECT WITH WORLD**

எந்தவித கல்லூரி கட்டணமும் இன்றி உங்களுக்கான உயர் கல்வி (100 % இலவசம்)

தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் Taiwan நாட்டின் பல்கலைக்கழத்தில் இலவசமாக படித்துக்கொண்டு குறித்த துறையில் வேலையும் செய்யமுடியும் .

உயர் கல்வி விபரங்கள்

- Department of Information technology
- Department of Tourism
- Department for Fashion Design

வயது எல்லை 18 – 22 வரை விண்ணப்பிக்க முடியும்

கல்வித்தகமை
O/L சித்தி போதுமானது .

குறிப்பிட்ட அளவான மாணவர்களே இணைய முடியும் என்பதால் உங்கள் பதிவை உறுதி படுத்த இன்றே அழையுங்கள் .

| | |
|---|---|
| திகதி | 2017 /12/03 (10.00 AM) |
| இடம் | LONDON METROPOLITAN COLLEGE JAFFNA . (EXPONET) |

உங்கள் பதிவு மற்றும் மேலதிக தகவல்களுக்கு : 071 41 50 995 / 077 4765990

LONDON METROPOLITAN COLLEGE

**LONDON METROPOLITAN COLLEGE**
No 136, palali road, parameswara junction, Jaffna.
தினேஸ் பேக்கரியின் மேல்புறம்

**TEL : 021 753 8395**

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 . 01 . 1947 | 25 . 11 . 2017 |

## திருமதி விஜயலட்சுமி சிதம்பரநடேசன்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி சிதம்பரநடேசன் 25.11.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - நேசம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரநடேசன் அவர்களின் அன்பு மனைவியும், ஜெகநாதன், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம், நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனியும், உமாசுதன், விஜிதா, சுதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவகரன், சுஜீவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜிதா, தனுசன், கீர்த்தீசன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், கஜானனன், பிருத்திகா, ஊர்மிகா, சயாரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2017)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஜி.பி.எஸ்.றோட்,**
**கல்வியங்காடு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



# பார்சிலோனா - வலென்சியா ஆட்டம் சமநிலையில் முடிவு

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பார்சிலோனா - வலென்சியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்தே ஆட்டம் சமநிலை கண்டது. பார்சிலோனாவின் சார்பில் ரொட்ரிகோ 44ஆவது நிமிடத்திலும், வலென்சியாவின் சார்பில் ஜோர்டி 73ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்தனர். (ம)

**தேவை**

கிளிநொச்சியிலுள்ள பிரபல உணவகம் ஒன்றிற்கு காசாளர். சமையல் உதவியாளர். வெயிட்டர். கொத்துபாஸ் தேவை.
தொடர்பு - 077 893 2908

**வீடு வாடகைக்கு உண்டு**

சிறுப்பிட்டி மத்தியில் சமுர்த்தி வங்கிக்கு அருகில் எல்லா வசதிகளுடன் கூடிய சுற்றுமதில் கொண்ட வீடு வளவு வாடகைக்குண்டு.
**தொடர்பு - 077 111 5360, 076 802 5826**

திரு.ஷாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்புகள்

**SPOKEN ENGLISH**

O/L, A/L எழுதியோர் இளைஞர், யுவதிகள்,பல்கலை மாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள்,வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.

எமது நேரடியான உரையாடல்மூலமான பயிற்சியில் இணைவதன் மூலம் ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 02.12.2017 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் வகுப்புகள் ஆரம்பம் (செவ்வாய் மற்றும் வியாழன்) - 05.12.2017
பிரிவு 1.காலை 08-10 பிரிவு 2. காலை 10-12

SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் அருகில்)
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி உயிரிழந்தார் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ். நடப்புவருடத்தின் ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய 5ஆம் நாளின் போது கியூக்ஸ்க்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கறுப்புப் பட்டிகளை அணிந்து ஆஸ்திரேலிய வீரர்கள் விளையாடினர். (ம)

# கண்ணீர் அஞ்சலி



2017.11.27 ஆம் திகதி அத்தியடி பிள்ளையார் பாதம் அடைந்த முன்னாள் பிரதம குரு

**சிவஸ்ரீ**
**நா. யோகீஸ்வரக்குருக்கள்**

அவரது மறைவை இட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து குருக்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிங்கப்பூர் ஜுவல்லறி**
**இல. 28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.